Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

திருமண வைபவங்களுக்கு
ஏற்ற உயர்தரப் பட்டுப்புடவைகள்

கோலம் ♥ அபூர்பா
♥ பௌரறிஸ்

இதர ரக பட்டு ஜவுளிகளை
நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P - 222 2063



மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 சித்திரை - 02 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற.அவ்வல்05 (15.04.2005) வெள்ளிக்கிழமை இதழ்:198

# இலங்கை சமாதான முன்னெடுப்புக்களில் ஈடுபடுவது குறித்து கனடா ஆலோசனை!

## பங்களிப்புக் குறித்து ஆராய்வதற்காக வெளிவிவகார அமைச்சர் வரவுள்ளார்!

(ரொறன்ரோ)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் கனடிய அரசாங்கம் தலையீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருப்பதாகவும்

சமாதான முயற்சிகளில் எத்தகைய பங்களிப்பைச் செய்யலாம் என்பது குறித்து அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் பல்வேறு சந்திப்புக்களை நடத்தி வருவதுடன், விரைவில் இலங்கைக்கு வந்து சகல பகுதிகளுக்கும் சென்று இங்குள்ள நிலைமைகளை மதிப்பீடு செய்யவிருப்பதாகவும் கனடிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை சமாதான முயற்சிகளில் மேலும் கூடிய அக்கறை செலுத்துவது குறித்து ஆராய்ந்து வரும் கனடிய வெளியுறவு அமைச்சர் கனடாவிலுள்ள இலங்கைத் தமிழர், சிங்களவர், முஸ்லிம்களுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினைத் தீர்வு முயற்சியில் கனடா எத்தகைய பங்களிப்பைச் செய்யமுடியும் என்பது குறித்து அவர் இந்தச் சந்திப்புக்களில் தீவிரமாக ஆராய்ந்துள்ளார்.

அத்துடன், கனடிய அரசு - மோதலில் சம்பந்தப்பட்ட தரப்புக்களை சமாதானப் பேச்சுக்கள் மூலம் எப்படி இணக்கத்துக்குக் கொண்டுவருவது என்பது குறித்தும் இவர் ஆலோசித்து வருகிறார்.

இதுவரைகாலமும் சமாதான முயற்சிகள் தொடர்பாக கனடா வரையறுக் (12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அம்மாவுக்கு நெருக்கடி வலுக்கப் போகுது பாருங்கோ....!

# சமாதான முயற்சிகளில் அமெரிக்கா தலையிடுமா?



## கிறிஸ்ரீனா றொக்காவின் விஜயம் குறித்து சந்தேகம்!

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வு காணும் முயற்சிகளில் அமெரிக்கா தலையிடுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருப்பதாகவும்-

இந்த தலையீட்டுக்கான முயற்சியின் ஒரு கட்டமாகவே அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரினா றொக்காவின் விஜயம் அமையலாம் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கிறிஸ்ரினா றொக்கா இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயத்தின்போது சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைகுறித்து அவர் அரசதரப்புத் தலைவர்களுடன் முக்கிய கலந்துரையாடல்களை நடத்தவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இலங்கை சமாதான முயற்சிகளில் இந்தியா தலையிட வேண்டுமென சில தரப்பினர் கோரிவரும் நிலையில் கிறிஸ்ரினா றொக்காவின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக் கட்டமைப்பு உடன்பாடு இம்மாத இறுதிக்குள் கைச்சாத்து!

ஜயந்த தனபால தெரிவிப்பு

## உயர்தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும்!

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறு மெனவும் -

## 157.5 மில்லியன் டொலரை

# இலங்கைக்கு உடனடியாக வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம்!

# பொதுக் கட்டமைப்பு உடன்பாடு இம்மாத இறுதிக்குள் கைச்சாத்து!

## ஜயந்த தனபால தெரிவிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை புனரமைப்பதற்கான வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணைந்து ஆமைக்கவுள்ள பொதுக்கட்டமைப்பு உடன்பாடு இந்த மாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படும் என்று அரசாங்க சமாதானச் செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசு சமாதான் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால தெரிவிக்கையில் -

பொதுக்கட்டமைப்பை ஏற்படுவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்துள்ளன. விடுதலைப் புலிகளின் தரப்பு பதில் விரைவில் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாகக் கிடைக்கும்.

இதன் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா உடன்பாடு செய்து கொள்வதற்கான திகதியை அறிவிப்பார். குறித்த தினத்தில் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்திடப்படும் என்றும் ஜயந்த தனபால மேலும் தெரிவித்தார். (01)

# உயர்தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும்!

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறு மெனவும் - எந்தக் காரணங்களுக்காகவும் இது ஒத்திவைக்கப்படமாட்டாதெனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜூன் மாதம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படும் என்று வதந்திகள் பரவிவருவது குறித்தே பரீட்சைத் திணைக்களம் நேற்று இவ்வாறு தெரிவித்தது.

ஏற்கனவே பரீட்சைக்கான தற்காலிக அட்டவணை வெளியிடப்பட்டுள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### 157.5 மில்லியன் டொலரை

# இலங்கைக்கு உடனடியாக வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம்!

(கொழும்பு)

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமானத்திற்கென அவசரகால உதவியாக கடந்த மார்ச் மாதம் ஒப்புதல் அளிக்கப்பட்ட 157.5 மில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச நாணயநிதியம் வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த நிதி - எவ்வித தாமதமுமில்லாமல் உடனடியாகவே இலங்கைக்கு வழங்கப்படும் எனவும் சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையே இந்த நிதி வழங்கப்படுவதாகவும், எனினும், இலங்கை அதன் அழிவிலிருந்து மீண்டெழ நீண்ட காலம் எடுக்குமென எதிர்பார்ப்பதாகவும் நேற்றுமுன்தினம் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சுனாமி அனர்த்தம் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் 4.5 வீதம் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் இந்த வருடம் 6

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸாரின் நடவடிக்கைக்கு எதிராக அம்பாறையில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

## கூட்டத்தைக் கலைக்க கண்ணீர்புகைக்குண்டு வீச்சு

(அம்பாறை)

பொலிஸாரின் பவுசர் மோதி சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து - மகாஓயா பொலிஸ் நிலையம் முன்பாக பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது - அவர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டு வீச்சு, தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாருக்கு தண்ணீர் எடுத்துச்சென்ற பவுசர் ஒன்று மோதியதில் 12 வயதுச் சிறுவன் ஒருவன் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று மூன்று மணி நேரத்தின் பின்னரும் கூட பொலிஸார் சம்பவ இடத்துக்குச் செல்லாததைக் கண்டித்து - பெருமள பொதுமக்கள் மகாஓயா பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அத்துடன், பொலிஸ் நிலையம் மீது கல்வீச்சுத் தாக்குதலும் நடத்தப்பட்டது. இதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களைக் கலைக்க பொலிஸார் தடியடிப் பிரயோகம், கண்ணீர் புகைக்குண்டுவீச்சுத் தாக்குதலை மேற் கொண்டனர்.

இதனால், அருகிலிருந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்களும் சிதறி ஓடினர். இந்தச் சம்பவத்தால் நேற்றுமுன்தினம் நள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இருவேறு திட்டங்களுக்காக 197 மில்லியன் டொலர் உதவி!

## ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமானம் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தியென இரு திட்டங்களுக்கு 197 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி - சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமானத்துக்கு (TAARP -இதில் சமூக அடிக்கட்டுமானம், பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் என்பன அடங்கும்) 150 மில்லியன் டொலர் நன்கொடையாகவும், 7 மில்லியன் டொலர் கடனடிப்படையிலும் வழங்கப்படவுள்ளது. மற்றையது - வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அபிவிருத்திப் பணிக்காக நிகொட் திட்டத்திற்கு 14 மில்லியன் டொலர் நன்கொடையாகவும், 26 மில்லியன் டொலர் கடனடிப்படையிலும் வழங்கப்படவுள்ளது.

சுனாமியாலும், யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் கட்டுமானப் பணிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவுமென அதன் பணிப்பாளர் அலெஸ்சான்ரோ பியோ தெரிவித்துள்ளார்.

# வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முன்றாவது மனிதன் வெளியீடான இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கிய படைப்பு, படைப்பாளர்கள் பற்றிய குறிப்புக்கள் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏ.ஜே.கனகரத்தினா தலைமையில் யாழ்.பிரஞ்சு நட்புறவுக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை – பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ். பிரஞ்சு நட்புறவுக் கழக இயக்குநர் கலாநிதி ஜேராட் றொபுஷொன் வரவேற்புரையையும், சோ.பத்மநாதன், ராதேயன் பொன், பூலோகசிங்கம் ஆகியோர் நூல் நோக்கினையும் இ.ரமணன் நன்றியுரையினையும், வழங்கவுள்ளனர் என யாழ்.பிரஞ்சு நட்புறவுக்கழகம் தெரிவித்துள்ளது.


## முக்கிய அறிவித்தல்

15.04.2005 இல் துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன்தேவஸ்தான இராஜகோபுர திருப்பணி நிதிக்கான மாபெரும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. இந்தச் சீட்டிழுப்பு எதிர்வரும் 07.11.2005 ஆம் திகதியில் அதிஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறோம். இதுவரை அதிஷ்டலாபச் சீட்டை வாங்கியவர்கள் ரிக்கற்றை கவனமாக வைத்திருக்குமாறு வேண்டுகிறோம்.

(1127) திருப்பணிச் சபையினர்


## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கை நெறிகளை மேற்கொள்ள விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நீர்க்குழாய் பொருத்துதல், மரவேலை, வீட்டு மின்இணைப்பு, கட்டடவேலை, மின் ஒட்டுவேலை ஆகிய கற்கை நெறிகளை பயில விரும்புபவர்கள் ஏதாவது விரும்பிய கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியுமெனவும், சுனாமி அனர்த்தத்தால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்களை அதிகளவில் எதிர்பார்ப்பதாகவும் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன் தெரிவித்தார். (91)

## சதுரங்கப் போட்டி முடிவுகள்

இணுவில் பொதுசன நூலகம் புனரமைக்கப்பட்டு 3ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் மாவட்டமட்ட சதுரங்கப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு –

திலகராஜா இராஜசிங்கம் (தொண்டமானாறு), சுப்பிரமணியம் திருச்செல்வம் (துப்பசிட்டி), நாகப்பர் சோதிநாதன், (தும்பசிட்டி).


# UNIT

இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை வழங்கி வருகின்றோம். கணனித் துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

கொழும்பு விலையில் 3 வருட முழு உத்தரவாதம்

எமது சேவைகள் பல அவற்றுள் சில :

விற்பனை

- உலகத்தரம் வாய்ந்த பிந்தியேக உதிரிப்பாகங்களை தெரிவு செய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களில் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குதல்

விலை குறைவு என்பதற்காக தரம் குறைந்தவையல்ல மிகமிக உயர்ந்தவை

New Year Offer

நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்

Inkjet Printer/2400 DPI Scanner/ Computer Table/600VA UPS

மற்றும் Screen Filter, Mouse pad & Dust Cover Totally Free

எல்லாமே Hybrid Boost, Hypher Thread, Dual Monitor வசதிகளுடன்

புதிய Multimedia Pentium IV கணனிகள்

மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

An Indian Engineer's Centre

We are entirely different from others

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை சில தினங்கள் மட்டுமே

Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.



குழந்தை இயேசுவின் ஆசியுடன் இன்று (15.04.05) 5 ஆம் வருட நிறைவை

# பாலன்ஸ் மல்ரி சென்ரர் & லொஜ்

மன மகிழ்ச்சியுடன் பூர்த்தி செய்யும் வேளையில் வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



உரிமையாளர் – பொ.ஜெயபாலன்

- கொம்பியூட்டர்
- போட்டோப் பிரதி
- வலைப்பின்னல்
- தொலைநகல்
- தொலைத்தொடர்பு
- லமினேற்றிங்
- கட்டடப் பொருட்கள்

அனைத்தையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல:021 222 3248
தொலைநகல் இல: 021 222 7299

இல.71 (39), கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(C/4053)



CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

## Program Assistant

Within the framework of the **Children Program** HUDEC needs a program assistant. The Children program will be implemented in coordination with Hudec relief operation for tsunami disaster.

**Job Summary**

The Program Assistant will work closely with the program Manager during the assessment, the formulation and the implementation of the Children Program to be set up under the direction of Hudec / caritas strategy.

**Requirements**

- Working knowledge of English
- Good communication skills
- Experience to work in a social environment
- A clear and creative mind
- Good team player
- Computer skills (word, excel, internet…)
- Good Analytical skills
- Notions of local social – cultural context
- Wiling to travel extensively

*Please send your application by the 22nd of April to the director of Caritas – Hudec:*

***Father Jeyakumar***
***Caritas – Hudec Jaffna***
***14, Mathew's Road, Deougu Street,***
***Jaffna.***

(124)

PLEASE SPECIFY THE POST YOU ARE APPLY FOR IN YOUR APPLICATION.



CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

## Project Manager for Income Generating Projects

CARITAS – Hudec is an Humanitarian Organization.
Within the Framework of its 2 Years program for relief after tsunami disaster,
CARITAS – Hudec needs a project manager for income generating activities, in Jaffna.

**Job description**

**Project Manager for Income Generating Projects**

Integrated to the "Social Activities" Department and in charge of the implementation of the income generating projects to be set up under the direction of caritas / Hudec strategy: selection of projects, financial and administrative follow-up and networking with the other Humanitarian Organizations (local and international) involved in Income Generating Projects.

**Requirements**

- Experience in micro – finance, micro – credits / income generating activities
- Good analytic skills
- Fluency in English
- Ability to work on the field and travel extensively
- Good communication skills
- Good team player
- Computer skills (work, excel, internet, tally…)

Please send your application by Friday the 22nd of April to the director of CARITAS Hudec:

***Father Jeyakumar***
***CARITAS – Hudec Jaffna***
***14, Mathew's Road, Deougu Street,***
***Jaffna.***

(125)

PLEASE SPECIFY THE POST YOUR APPLY FOR IN YOUR APPLICATION.

## இலங்கை இனப்பிரச்சினையை தீர்க்கமுடியாத இந்தியாவுக்கு ஐ.நாவில் நிரந்தர உறுப்புரிமையா?

### இலங்கை இராஜதந்திரி கேள்வி எழுப்புகிறார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்புரிமை பெற வேண்டுமானால், இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்தியா அதிக அக்கறை செலுத்த வேண்டும் என - இலங்கையின் முக்கிய இராஜதந்திரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். கல்யானந்த கொடகே எனும் இராஜதந்திரி ஒருவரே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அதிக மக்கள் தொகை, அணு ஆயுதபலம் என்பவற்றை மட்டும் அடிப்படையாகக்கொண்டு - ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர அங்கத்துவத்தைப் பெற இந்தியா முயல்வது தவறானது. பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் சமாதான நடவடிக்கைகளில் அக்கறையற்ற தன்மையை இந்தியா கொண்டிருக்குமானால், அது தனது இலக்கை அடைய முடியாத நிலை ஏற்படும்.

இந்தியாவின் அயல் நாடான இலங்கையில் மிக நீண்டகாலமாகத் தீர்வு காணப்படாமல் தொடரும் இன முரண்பாட்டுக்குத் தனது ஆளுமையைப் பயன்படுத்தித் தீர்வைக் காணமுயலாத அல்லது முடியாத இந்தியாவுக்கு ஐ.நா.பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவத்தைப் பெறும் தகுதி கிடையாது.

இந்தியா - இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தலையிடாத போக்கைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமானால் - அமெரிக்கா அல்லது அதன் சார்பான நாடு ஒன்று பிராந்தியத்தில் நிலை கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதோடு - தனது பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்திக்கொள்வது தவிர்க்கமுடியாததாகிவிடும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (01)

## படையினர் பொலிஸார் இணைந்து தேடுதல்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் 64 ஆம் கட்டைப் பகுதியில் பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சந்தேகத்துக்கிடமான நபர்கள் இந்தப்பகுதிக்குள் ஆயுதங்களுடன் ஊடுருவியதாகக் கிடைத்த தகவலையடுத்தே, இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## துப்பாக்கி ரவைகளுடன் வாகனம் முகமாலையில் சிக்கியுள்ளதாம்!

(யாழ்ப்பாணம்)

முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து வாகனம் ஒன்றில் பத்து துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டதாகப் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இதையடுத்து வாகனத்தையும், அதன் சாரதியான பரமசிவம் பரமேந்திரா என்பவரையும் மேலதிக விசாரணைக்காகக் கொடிகாமம் பொலிஸாரிடம் கையளித்திருப்பதாக இராணுவத்தரப்பு தெரிவித்தது. கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

## பொறுப்பதிகாரியைச் சுட்ட கொன்ஸ்டபிள் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - பிள்ளையாரடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைக் கொலைசெய்ய முயன்றதாக ரிசேவ் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் மட்டக்களப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பிள்ளையாரடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எக்கநாயக்க - குறித்த பொலிஸ் கொன்ஸ்டபிள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்ததாகவும், இதையடுத்தே அவர் மதுபோதையில் வந்து துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் கொன்ஸ்டபிள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றத்துக்கு முஸ்தீபு

### இரகசிய நடவடிக்கைகள் தீவிரம்

(அம்பாறை)

கிழக்கில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் அம்பாறை உல்லை பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு இரகசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

சிங்கள தேசியவாதக் கட்சிகளான ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் தொடர்புடைய குழு ஒன்று - உல்லைப் பகுதியில் இருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

சிங்கள தேசியவாதிகளின் இந்த நடவடிக்கைக்குப் பொலிஸ் அதிகாரிகள் சிலரும் துணை போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பொத்துவில் பகுதியில் அமைக்கப்பட்ட புத்தர் சிலைக்கருகில் கைக்குண்டு வீசப்பட்ட சம்பவத்துடன் பொலிஸார் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் குண்டுவீச்சைத்தொடர்ந்து, திட்டமிட்டவகையில் தயார் நிலையில் இருந்த பொலிஸாரால் முஸ்லிம் மக்கள் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை உருவாக்குவதற்காகப் பொலிஸார் வேண்டும் என்றே கைக்குண்டை வெடிக்கச் செய்ததாக உல்லைப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (01)

## இரட்டை இயந்திர விமானங்கள் விடுதலைப் புலிகளிடம் இல்லை

### விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் இரட்டை இயந்திர விமானம் இருப்பதான தகவல்களை விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா முற்றாக நிராகரித்துள்ளார்.

சிங்கள வார இதழ் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிக்கையில் -

புலிகளிடம் Zlin 143 ரக விமானம் உள்ளது உறுதிப்படுத்தப்பட்டபோதும் - இதனால் விமானப்படைக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கைதிகளைப் பார்வையிட விசேட சலுகை அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ், சிங்கள புதுவருட தினத்தை முன்னிட்டு சிறைக்கைதிகள் தமது உறவினர்களைக் கூடுதலான நேரம் சந்திப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் மர்சூத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

புத்தாண்டை முன்னிட்டு சிறைச்சாலைக்கு உறவினர்கள் வரும் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விசேட சலுகை நேற்றும், இன்று மட்டும் நடைமுறையில் இருக்கும். இது உறவினர்கள் கைதிகளைக் காலை 8 மணி யிலிருந்து, மாலை நான்கு மணி வரை சென்று பார்வையிடலாம். இந்த நடவடிக்கை அமைச்சர் ஜோன் செனி விரத்னவின் ஆலோசனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

அடுத்து வரும் புத்தாண்டுகளிலும் இந்த நடைமுறை பின்பற்றப்படவுள்ளது. சிறைச்சாலை அதிகாரிகளின் பரிசோதனையுடன், உறவினர்கள் உணவுப் பண்டங்களையும் வழங்க முடியும். அத்துடன் கைதிகளின் மனோநிலையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## புலிகளின் விமான ஓடுபாதை குறித்து முன்னைய படங்களை வைத்து சந்திரிகா உலகை ஏமாற்றுகிறார்

### திலக் மாரப்பன குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப்புலிகள் இரணைமடுவில் விமான ஓடுதளம் ஒன்றை அமைத்திருப்பதாக வெளியான கருத்து தவறானது என - முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திலக் மாரப்பன ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலப்பகுதியில் விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேராவுடன் தொடர்புகொண்டு, விடுதலைப் புலிகளிடம் விமானப் படைப் பிரிவு இருப்பதற்கான வாய்ப்புக் குறித்து ஆராந்தேன்.

2003 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் ஆளில்லாத உளவு விமானங்களின் உதவியுடன் வன்னிப் பகுதியில் இது தொடர்பாகத் தேடுதல் நடத்தப்பட்டபோதிலும், விமான ஓடு தளம் ஒன்று இருப்பதற்கான தடயங்கள் எதுவும் பெறப்படவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சை 2003 ஆம் ஆண்டு இறுதியில் பொறுப்பேற்ற பின்னரே இந்த ஓடுதளம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் தாக்கியழிக்கப்பட்ட புலிகளின் விமான ஓடுதளம் தொடர்பாக, தாக்குதலுக்கு முன்னர் பெறப்பட்ட உளவு விமானப் புகைப்படங்களைக்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா உலகத்தை ஏமாற்ற முயற்சிக்கின்றாரோ என்ற சந்தேகம் தோன்றியுள்ளதாகவும் திலக் மாரப்பன மேலும் தெரிவித்தார். (01)

## பொலிஸ் நிலையங்களில் மக்கள் தொடர்பு அதிகாரிகள்

### 399 பட்டதாரிகளுக்கு பயிற்சி

பொலிஸ் சேவையில் முதன்முறையாக மக்கள் தொடர்பு அதிகாரிகள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

399 பட்டதாரிகள் பொலிஸ் சேவையில் தற்போது சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கான விசேட பயிற்சி பொலிஸ் திணைக்கள நிபுணர்களால் வழங்கப்பட்டுவருகிறது.

இவர்களுக்கான பயிற்சிநெறி முடிவடைந்ததும், நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இவர்கள் பொலிஸ் நிலையங்களில் பணியாற்றத் தொடங்கிய பின்னர் பொதுமக்களுக்கும், இவர்களுக்குமான தொடர்பு சுமூகமான முறையில் இடம்பெறும்.

இதன்மூலம் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், குற்றாவாளிகள் இலகு வாக இனங்காணப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படவும் வாய்ப்பு ஏற்படும். இப்படியான திட்டத்தின்மூலம் நாட்டில் பெருகிவரும் குற்றச்செயல்களைக் கணிசமான முறையில் குறைக்க முடியுமென பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## 3 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்படுகிறதாம்!

### மத்திய வங்கி பிரதி ஆளுநர்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியப் பொருட்கள் உரிய விலையில் விற்பனை செய்யப்படாததால் - பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தை எதிர்நோக்குவதாக இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டபிள்யு.ஏ.விஜயவர்த்தன தெரிவித்தார்.

ஒரு பீப்பாய் மசகு எண்ணெயை 45 - 48 அமெரிக்க டொலர்கள் வரை செலுத்தி இலங்கை இறக்குமதி செய்வதாகவும் - எரிபொருளை உபயோகித்து மின் உற்பத்தி செய்யும் மின்சாரசபைக்கும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் வருடமொன்றுக்கு 3 ஆயிரம் கோடி ரூபா நட்டமேற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நட்டத்தை ஈடுசெய்ய வரிச்சுமையைப் பொதுமக்கள் மீது சுமத்த வேண்டியேற்படும். அல்லது இலங்கை அரசாங்கம் வேறு ஏதேனும் ஒரு செலவை இரத்துச்செய்ய வேண்டி நேரிடும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மின்சாரக் கட்டண அதிகரிப்பை வலியுறுத்துகிறது மின்சார சபை

(கொழும்பு)

மின் உற்பத்திக்கு எரிபொருள் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தத் தவறினால், மின் கட்டணத்தை 48 வீதமாக அதிகரிக்க வேண்டியேற்படும் என இலங்கை மின்சாரசபை அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

தற்போது ஒட்டுமொத்த மின் உற்பத்தியில் 65 வீதமான உற்பத்தி - எரிபொருளைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்படுகிறது. டீசலின் விலை அதிகரித்துச் செல்வதனால், அதனால் ஏற்படும் செலவை மின்சார சபையினால் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக மின்சார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.


மின் உற்பத்திக்கான மாற்று வழிகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தாததினால் இந்தப் பிரச்சினை மேலும் மோசமடைந்துள்ளது.

தற்போதைய நிலையில் மின்சார சபையைக் கொண்டுநடத்த வேண்டுமாயின், மின் கட்டணத்தை 48 வீதம் அதிகரிக்க வேண்டும் என மின்சார சபை அதிகாரிகள் - மின்சக்தி அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# நியூஸிலாந்து அணியிடம் இலங்கை இனிங்ஸ் தோல்வி








(வெலிங்டன்)

வெலிங்டனில் நடைபெற்றுவந்த நியூஸிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், இலங்கை அணி இனிங்ஸ் மற்றும் 38 ஓட்டங்களால் படுதோல்வி கண்டது.

முதல் இனிங்ஸில் 211 ஓட்டங்களை எடுத்த இலங்கை அணி - 311 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்ஸில் விளையாடியது.

நான்காம்நாள் ஆட்டநேரமுடிவில் - ஒரு விக்கெட்இழப்புக்கு 10 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த இலங்கை அணி நேற்று இறுதிநாள் ஆட்டத்தில் மோதியது.




நேற்று ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே - ஸ்கோர் 47ஆக இருந்தபோது - 16 ஓட்டங்களுடன் இருந்த அத்தப்பத்து ஆட்டமிழந்து சென்றார்.

இதன்பின்னர் மஃரூப்புடன் சங்கஹார இணைந்து சற்று நிதானமாக ஆடினர். இதனால் ஸ்கோர் உயர்ந்தபோதும் - அணி 95 ஓட்டங்களைப் பெற்றிருந்தநிலையில் மஃரூப்பின் விக்கெட்டை மில்ஸ் வீழ்த்தினார். இதையடுத்து நான்காவது விக்கெட்டாக ஜெயவர்த்தன இணைந்தபோதும் - அவர் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோது அணியின் ஸ்கோர் 117ஆக மட்டுமே இருந்தது.

இதன்பின்னர், ஸ்கோர் 137ஆக இருந்தபோது, சங்கஹார 45 ஓட்டங்களுடனும், ஸ்கோர் 164ஆக இருந்தபோது - 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த சமரவீரவும், ஸ்கோர் 177ஐ எட்டியபோது ஒரு ஓட்டத்துடன் கலவிற்றிகொடவும் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் டில்ஷான் - வாஸ்




ஜோடி நிலைத்துநின்று நிதானமாக ஆடி ஓட்டங்களைப் குவித்தது. இதனால் அணியின் ஸ்கோர் 255ஐ எட்டியது.

எப்படியாவது இனிங்ஸ் தோல்வியைத் தவிர்த்துவிட இவர்கள் போராடியபோதும் - அணியின் ஸ்கோர் 255ஐ எட்டியபோது டில்ஷான் ஆட்டமிழந்ததால் இந்த நம்பிக்கை பறிபோனது.

டில்ஷான் 99 பந்துகளில் 10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 73 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உபுல் சந்தன 8 ஓட்டங்களுடனும், சமிந்த வாஸ் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தபோது - இலங்கை அணி 273 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

இதனால் நியூஸிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 38 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.



பந்துவீச்சில் பிராங்ளின்4 விக்கெட்டுக்களையும், அஸ்ரில் 3 விக்கெட்டுக்களையும், மில்ஸ் 2 விக்கெட்டுக்களையும், மார்ட்டின் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# இன்று நடைபெறும் போட்டிகள்

யாழ்.வலயத்துக்கு உட்பட்ட கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாண கோட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறும் போட்டிகளின் விபரம் வருமாறு -

15 வயதுப் பிரிவு-சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் அத்தியார் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி எதிர் ஆவரங்கால் மகாஜனக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி, ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் ம.வி. எதிர் யாழ்.கனகரட்ணம் ம.ம.வித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு-சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் செங்குத்தா இந்துக் கல்லூரி, ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் ம.வி. எதிர் அத்தியார் இந்துக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி எதிர் அச்சுவேலி மத்திய கல்லூரி.

19 வயதுப் பிரிவு - யாழ்.இந்துக் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி எதிர் யாழ்.கனகரட்ணம் ம.ம.வித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி எதிர் அத்தியார் இந்துக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் ஆவரங்கால் மகாஜனா வித்தி யாலயம்.

இந்தச் சுற்றுப் போட்டியின் காலிறுதி, அரையிறுதிப் போட்டியும், இறுதிப் போட்டியும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (58)

# விளையாட்டு

# செஸ் ஒஸ்கார் விருது இந்தியாவின் ஆனந்துக்கு!

(புதுடெல்கி)



இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் செஸ் ஒஸ்கார் விருதுக்கு நான்காவது முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச அளவில் ஆதிக்கம் செலுத்தும் வீரருக்கு ஆண்டுதோறும் 64 இதழ் சார்பில் செஸ் ஒஸ்கார் விருது வழங்கப்படும். 74 கிராண்ட் மாஸ்டர்கள் உட்பட 445 செஸ் நிபுணர்கள் சிறந்த வீரரை தெரிவு செய்வர்.

இவர்களது தேர்வில் ஆனந்த் முதலிடத்தைப் பிடிக்க, நான்காவது முறையாக (1997, 98, 2004, 2005) செஸ் ஒஸ்கார் விருதைச் தட்டிச் சென்றார். இந்த விருதை நான்குமுறை பெறும் ரஷ்யர் அல்லாத முதல் வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றார். 5 ஆயிரத்து 205 புள்ளிகள் பெற்றுள்ள ஆனந்துக்கு வெண்கலச் சிலை ஒன்று பரிசாக அளிக்கப்படும்.

இதுவரை 10 முறை செஸ் ஒஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது. ரஷ்யாவின் காரி கஸ்பரோவ் ஐந்து (1995, 96, 99, 2001, 2002) மற்றும் ஆனந்த் நான்குமுறை இந்த விருதைப் பெற்றுள்ளனர்.

# கொக்குவில் இந்து அணிகள் மூன்று பிரிவுகளிலும் சம்பியன்!



17 வயதுப் பிரிவு அணி



19 வயதுப் பிரிவு அணி



15 வயதுப் பிரிவு அணி

யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு ஆகிய மூன்று வயதுப் பிரிவுகளிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவானது.

இந்தச் சுற்றுப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட அணிகள் வருமாறு - 15 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, வேம்படி உயர்தரப் பாடசாலை.

17 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி, ஆவரங்கால் நட ராஜ இராமலிங்கம் வித்தியாலயம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

19 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.

# இந்திய - பாகிஸ்தான் அணிகள் கான்பூரில் இன்று பலப்பரீட்சை!



இந்திய-பாகிஸ்தான் அணிகளிடையேயான 5ஆவது ஒருநாள் போட்டி கான்பூரில் இன்று நடைபெறவுள்ளது. இதற்காக இரு அணி வீரர்களும் நேற்று முன்தினம் கான்பூர் சென்றடைந்தனர். இவர்கள் நேற்று வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து 2 ஆட்டங்களில் தோற்றதால் இந்திய அணி மீது ரசிகர்கள் அதிருப்தியில் உள்ளனர்.

இந்தத் தோல்விகளால் இந்திய அணிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தொடரைக் கைப்பற்றவோ- அல்லது சமன் செய்யவோ இன்றைய ஆட்டம் முக்கியமாக இருக்கும். டெஸ்ட் தொடர் எப்படி 1-1 என்ற கணக்கில் சமனிலையில் முடிந்ததோ அதுபோல ஒருநாள் தொடரும் 3-3 என்ற கணக்கில் சமனிலையில் முடியலாமெனக் கருதப்படுகிறது.

வெற்றிக்காக இரு அணி வீரர்களும் போராடுவார்கள் என்பதால் ஆட்டம் விறுவிறுப்பு நிறைந்திருக்கும்.


இன்றைய ஆட்டம் காலை 9 மணிக்குத் தொடங்கும். தூரதர்சனில் இந்தப் போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படும்.

# கான்பூர் போட்டியில் விளையாட கங்கூலிக்கு ஐ.சி.சி. அனுமதி!

இந்திய கப்டன் கங்கூலிக்கு ஐ.சி.சி.விதித்த தடையை எதிர்த்து அவர் முறையீடு செய்துள்ளதால், பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரின் 5ஆவது போட்டியில் விளையாட ஐ.சி.சி. அனுமதி வழங்கியுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய அணி பந்துவீச அதிகநேரம் எடுத்துக் கொண்டதற்காக கப்டன் கங்கூலிக்கு 6 ஆட்டங்களில் விளையாட ஐ.சி.சி தடை விதித்தது. எனினும், இந்தத் தடையை எதிர்த்து கங்கூலி மேல்முறையீடு செய்துள்ளதால், அவர் இன்று கான்பூரில் நடைபெறும் 5ஆவது ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அகமதாபாத்தில் நடைபெற்ற 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி தலா 48 ஓவர்களைக் கொண்டது. குறித்த நேரத்துக்குள், 48 ஓவர்களை இந்திய அணி வீசி முடிக்கவில்லை. 3 ஓவர்களை வீச இந்திய அணி கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டது. தொடர்ந்து 2 ஆட்டங்களில் இந்த மாதிரி நடைபெற்றதால்தான், அணியின் தலைவர் என்ற முறையில் கங்கூலிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



ஜம்ஷெட்பூரில் நடைபெற்ற ஆட்டத்திலும் இந்திய அணி பந்துவீச அதிகநேரம் எடுத்துக்கொண்டது. இதையடுத்து கங்கூலியின் ஊதியத்திலிருந்து 70 சதவீதத்தை அபராதமாகக் கட்டவேண்டுமென உத்தரவிடப்பட்டது. போட்டி நடுவர் கிரிஸ் பிராட்டிடம் தவறை ஒப்புக்கொண்டார் கங்கூலி.

5 மாதங்களுக்கு முன்பு, பாகிஸ்தானுடனான ஒருநாள் ஆட்டத்தில், பந்துவீசுவதற்கு இந்திய அணி அதிக நேரம் எடுத்துக்கொண்டதையடுத்து 2 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட கங்கூலிக்குத் தடை விதிக்கப்பட்டது. பின்னர் மேல்முறையீடு செய்யப்பட்டு, தடை நீக்கப்பட்டது.

## குளிர்த்தி நிகழ்வு

(நவாலி)

வருடம் தோறும் நவாலி இளைஞர்களால் நடத்தப்படும் பங்குனித் திங்கள் குளிர்த்தி நிகழ்வு - கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆயிரத்துக்கும் அதிகமான அடியார்கள் பங்குபற்றி அம்மன் அருளைப் பெற்றுச் சென்றனர்.

## குடிநீர்த்தாங்கி அமைக்க கோரிக்கை

நவாலி வடக்கிலுள்ள புலவர் முகாமில் வசிக்கும் மக்களின் பாவனைக்கென, கடந்தவருட இறுதியில் குடிநீர்த்தாங்கியொன்று அமைப்பதற்காக அடித்தளம் கட்டப்பட்டதுடன், கட்டட வேலைகள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளன.

தமது குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஏதுவாகக் கட்டட வேலைகளை மீள ஆரம்பிக்குமாறு, சம்பந்தப்பட்ட தரப்பிடம் அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இந்து தர்மாசிரியர் பரீட்சைத் திணைக்களத்தால் - ஒக்ரோபர் மாதத்தில் நடத்தப்படவுள்ள பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் 248, 1/1 காலி வீதி, கொழும்பு -4 என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

அறிவிக்கப்பட்டவாறு இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ளவர்கள் இந்த மாதம் முதலாம் திகதி வெளிவந்த வர்த்தமானியில் பிரசுரமான - அறநெறிப் பாடசாலை இறுதி நிலைப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள், பண்டிதர் அல்லது சைவப்புலவர் பரீட்சையில் பட்டம் பெற்றவர்கள், க.பொ.த (உ/த) பரீட்சையில் இந்த நாகரிகம் அல்லது இந்து சமய பாடத்தில் சித்தியடைந்தவர்கள் ஆகியோரே இந்தப் பரீட்சைக்குத் தோற்றலாம்.

இந்தப் பரீட்சை ஐந்து வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். வேதனங்களும் ஆகமங்களும், சமய ஞானிகளும் சமயப் பெரியோர்களும், சைவ சமய வரலாறு, பன்னிரு திருமுறைகள், கோயில்களும் கலைகளும் ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்பட்ட ஐந்து விண்ணப்பங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஐந்து பாடங்களிலும் 40 புள்ளிகளுக்கு மேல் எடுத்துச் சித்தி பெறுபவர்களுக்கு - 'இந்து தர்மாசிரியர்' என்ற பட்டத்துக்குரிய சான்றிதழ் வழங்கப்படும். ஐந்து வினாத்தாள்களுக்குரிய பாடத் திட்டம் அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்துள்ளது.

## விபத்தில் யுவதி படுகாயம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடன்- மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணம்செய்த யுவதி காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆடியபாதம் வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் - உரும்பிராயைச் சேர்ந்த இராசதுரை நிருஷா (வயது 25) என்பவரே காயமடைந்தநிலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

## கணினி கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

(சுதுமலை)

கரைநகர் கனடா கலாசார நிறுவனத்தால் நடத்தப்படவுள்ள கணினி வகுப்புக்கள் - இந்த மாதம் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளவர்கள் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார். (91)

## சுனாமியால் சேதமடைந்த படகுகள் சீநோரினால் திருத்தப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கண்ணாடி நூலிழையிலான படகுகளைத் திருத்தும் செயற்திட்டம் - கடற்தொழில் நீரியல்வள அமைச்சின்கீழ் கொழும்பு சீநோர் தலைமையகத்தால், யாழ். கடற்தொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியின் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

இதன் முதற்கட்டம் கடந்த மாதம் 22 ஆம் திகதி காரைநகரில் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்தகட்ட நடவடிக்கை இளவாலையில் நடைபெற்று வருகிறது.

இதுவரையில் 24 கண்ணாடி இழைப்படகுகள் திருத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுக்கு உரிய உபகரணங்களை கொழும்பு சீநோர் தலைமையகத்தால் வழங்கப்படுகிறது.

யாழ்.மாவட்டம் முழுவதற்கும் இந்த வேலைத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதால், அடுத்த கட்ட நடவடிக்கைக்கான முயற்சிகள் பருத்தித்துறைப் பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இவை சம்பந்தமான விபரங்களை அறியவிரும்புவோர் - யாழ். கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாமென, கல்லூரி அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார். (206)

## விவசாய சான்றிதழ் கற்கைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(சுதுமலை)

யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாய நிறுவனம் நான்குமாத விவசாய சான்றிதழ் பயிற்சிநெறிக்கு 18-26 வயதுக்கு இடைப்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

நான்கு மாத காலம் விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம் ஆகிய துறைகளுக்கு க.பொ.த (சா/த) கல்வி கற்ற மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ள விவசாய சான்றிதழ் பயிற்சி நெறியில் இணைந்துகொள்ள விரும்புவோர் - மருதனார்மடத்திலுள்ள இந்த நிறுவனத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி 9 மணிக்கு இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (91)

# உள்ளூராட்சி மன்றத்தின் கீழுள்ள 14 பொது நூலகங்கள் தரமுயர்வு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத்தால் நடத்தப்பட்டுவரும் 14 பொது நூலகங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்டு வரும் இரண்டு பொது நூலகங்களும் தரம் 3 ஆக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

நூலகங்கள் தரமுயர்த்தப்பட்டுள்ளமை தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் து.விஜயலட்சுமி - சபைகளின் செயலாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபையின் மானிப்பாய், ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு கிராம பொது நூலகங்கள், வலி வடக்குப் பிரதேச சபையின் காங்கேசன்துறை, தெல்லிப்பளை பொது நூலகங்கள் - வலி. கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய், நீர்வேலி, புத்தூர், உரும்பிராய், அச்சுவேலி பொது நூலகங்கள் -

வலி.தெற்கு பிரதேச சபையின் உடுவில் பொது நூலகம், கிளிநொச்சியிலுள்ள பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் புலோப்பளை பொது நூலகம் , கரைச்சிப் பிரதேச சபையின் கிளிநொச்சிப் பொது நூலகம் ஆகிய நூலகங்கள் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதென தெரிவிக்கப்படுகிறது. (91)

# கைதடி பாலத்தினூடான போக்குவரத்தில் சிரமம்

(கைதடி)


புனரமைக்கப்பட்டு அண்மையில் திறந்துவிடப்பட்ட கைதடி பாலத்தின் இருமருங்கிலும் உள்ள வீதி - தார் ஊற்றிச் செப்பனிடப்படாமலுள்ளது.

இதனால் குன்றும் குழியுமாகவுள்ள இவ்விரு பக்கங்களிலும் பயணஞ்செய்வது சிரமமாகவுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.


குறிப்பாக சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பவற்றில் பயணஞ்செய்வோர் அதிலும் பொதிகள் ஏற்றிச்செல்வோர் - இந்தப் பகுதியில் சமநிலை குழம்பித் தடுமாறி விழுவதும் நாளாந்த நிகழ்ச்சியாகி விட்டது.

மழை காலங்களில் சகதியாகவும், வெயில் காலங்களில் புழுதியாகவும் காணப்படுவதால் பயணத்துக்கு மிகுந்த சிரமமாகவுள்ளது.

இந்த இரு பகுதிகளும் செப்பனிடப்படாது - அவசர அவசரமாகப் பாலத்தைப் போக்குவரத்துக்குத் திறந்துவிட்டமை, பொறுப்பற்ற செயலாகும் எனப் பொதுமக்கள் பலரும் விசனம் தெரிவித்தனர். (24)



நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்து சமயக் கண்காட்சியின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலய இந்து சமய ஆசிரிய ஆலோசகர் செல்வி பி.ஜெயலட்சுமி, நெடுந்தீவுக் கோட்டக்கல்வி அதிகாரி க.அரசரத்தினம், வித்தியாலய அதிபர் திருமதி சா.கிருஸ்ணதாஸ் ஆகியோர் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (113)



அண்ணாவியார் அ.மனோகரன் பாடிய 'குருதிநாதம்' தவக்காலப் பாடல்கள் அடங்கிய இறுவெட்டின் வெளியீடு அண்மையில் நடைபெற்றது. இந்த இறுவெட்டின் பிரதியை அருட்திரு அ.பி.ஜெயசேகரம் அடிகளார் - ம.அமலராஜனிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (206)

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு சேவை நிரந்தரமாக்கல் கடிதங்கள்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரும்- இலங்கை சமுர்த்தி அதிகார சபையால் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு, உறுதிப்படுத்தல் கடிதங்களும் அண்மையில் வழங்கப்பட்டன.

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் ஏறக்குறைய 35 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிக்குழுவாக சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சேவை உறுதிப்படுத்தல் கடிதங்கள் அதிகார சபையின் பணிப்பின் பேரில், யாழ். மாவட்டச் செயலரால் ஒப்பமிடப்பட்டு, உரிய பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பிரதேச செயலர் - ஆ.சுப்பிரமணியசர்மா குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு செயலகத்தில் வைத்து வைபவரீதியாக வழங்கினார். (44)

## நவீன முறையிலான கொல்களங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அதி நவீன தரத்திலான ஐந்து கொல்களங்கள் மிக விரைவில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இறைச்சிக்காக கால்நடைகளை வெட்டுவதற்கு ஏற்ற வகையில் சகல வசதிகளுடனும் கொல்களங்களை அமைப்பதற்கான இடங்களை யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும், மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரும் இணைந்து தெரிவு செய்யவுள்ளனர்.

மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கு ஒரு நவீன கொல்களம் என்ற வகையில் இவை அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் பழுதடைந்த நிலையிலே யாழ். மாவட்டத்திலுள்ள கொல்களங்கள் இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (91)

## சொற்பொழிவு

(நல்லூர்)

நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் - இன்று மாலை 6 மணிக்கு 'மெய்ப்பொருள் நாயனார்' எனும் தலைப்பில் செ.கவிகரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## மலசலகூடம் அமைப்பு

நிகொட் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அரியாலைப் பிரதேசத்தில் - அரியாலை மத்தி, தெற்கு ஜே-94 கிராம அலுவலர் பிரிவில் இளையதம்பி வீதி, சாலியப்பிட்டி என்னும் இடத்தில் 35 குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான கட்டடப்பொருட்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் வீதிப் புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பெயர் : சி.சபீனா
முகவரி : சங்கானை.



பெயர் : தே.கவிநயா
முகவரி : வல்வெட்டித்துறை.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ------------------------
------------------------
முகவரி : ------------------------
------------------------
பிறந்த ஆண்டு: ------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்




(சென்றவாரத் தொடர்ச்சி...)

வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு வெளியே தான் வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதில்லை. வீட்டில் இருந்து கொண்டே கைத்திறமையைப் பயன்படுத்தி பல பொருட்களைத் தயாரிப்பதன் மூலம் பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வீட்டைக் கவனிக்க ஒரு நபரை அமர்த்துவதன் மூலம், வீட்டு வேலை ஸ்தம்பிதம் அடைவதைத் தவிர்க்கலாம்.

நமது நாட்டில் இன்றும் கூட வீடுகளில் பெண்கள் வேலைக்காரிகளைப் போலவும், கவனத்தில் கொள்வதே இல்லை.

பொருளாதார ரீதியாக ஆண்களைச் சார்ந்து இருந்தால், கற்போடு இருக்க முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். பெண்கள் கற்புடன் திகழ்வது அவசியம் தான். அதற்கு பெண்கள் அடிமைகளாகத் தான் இருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை.

உலகம் முழுவதும் பெண்கள் ஒரே விதமாகத் தான் இருக்கிறார்கள். தங்கள் உரிமைகளையும், சலுகைகளையும் காத்துக்

# முடிவை நோக்கி...



பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும் நடத்தப்படுகின்றனர் என்பது வருத்தத்துக்குரிய விடயம். இதன் விளைவாக அவர்களுடைய தனித்தன்மை அழிக்கப்பட்டு விடுகிறது.

வீட்டு வேலை என்றவுடன் வெறுப்பு ஏற்படுகிறது. பெரும்பாலான ஆண்கள்- பெண்களின் கற்பைப் பற்றி பிரமாதமாகப் பேசுவார்கள். உரிமை பெற்றுள்ள மேலைநாடுகளில் மண வாழ்க்கை சீராக இல்லாததைச் சுட்டிக் காட்டுவார்கள். மேலை நாட்டுப் பெண்களுக்கு இருக்கும் சுதந்திரத்தை இவர்கள் கொள்ள வேண்டுமென்று விழிப்போடு இருக்கிறார்கள். இவர்கள் கல்வி அறிவு பெற்றவர்களாக இருக்கும் பொழுது, வெளிப்படையாகத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதால், அவர்கள் சுதந்திரம் உள்ளவர்கள் போல் எமக்குத் தோன்றுகிறது. எழுத்தறிவு பெறும்போது எல்லா நாடுகளிலும் இந்த நிலைதான் ஏற்படும்.

ஒரு நாட்டின் பொதுவான சமூக, பொருளாதார முன்னேற்றம் காரணமாக ஏற்படக் கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆண்கள் உதவுவதுதான். ஆனால் அதுபற்றி எடுத்துச் சொல்லி பெண்களிடம் ஒரு விழிப்பை ஏற் படுத்த முடியும்.

எல்லா உரிமைகளையும் கொண்ட ஆண்கள் - அவர்களைச் சார்ந்திருக்கும் பெண்கள் என்ற நிலையில் இருக்கும் சமூகத்தைவிட உரிமை உள்ளவர்களாக இருவருமே இருப்பது சிறந்ததாகும். வீடுகளில் மகிழ்ச்சியும் - மனநிறைவும் இருக்கும் போதுதான் நாடு நலம் பெறும். ✷

# உணவு கட்டுப்பாடு டயட் அல்ல

கொடிஇடை, இஞ்சி இடுப்பழகி என்றெல்லாம் பெண்களை வர்ணிப்பது - அவர்களின் உடல் மெலிந்திருப்பதைக் குறிக்கின்றன. மெலிவுதான் கவர்ச்சியாகக் கருதப்படுவதால் பல பெண் கள் மெலிவதற்காக உணவுக் கட்டுப்பாடு, யோகாசனம், தியானம், தேகப்பியாசம் போன்ற பல்வேறு விடயங்களில் ஈடுபடுகின்றனர்.

சில காலங்களுக்கு முன் உடலில் கொழுப்பு அதிகமாகக் காணப்பட்டால் அதற்கு வைத்தியம் செய்யப்பட்டது. பெண்களின் உணவுப் பழக்கங்களை மாற்றுமாறு கட்டாயப்படுத்தினார்கள். தினந்தோறும் பல தடவைகள் தமது நிறையை நிறுத்துப் பார்க்கவும், சாப்பிடும் ஒவ்வொரு உணவையும் தினக் குறிப்பில் எழுதவும் வற்புறுத்தப்பட்டனர். சாப்பிடும்போது நன்றாக மென்று சாப்பிடுதல் வேண்டும்.

இயற்கையாகவென்றாலும் சரி, தமது சொந்த விருப்பு வெறுப்புக்களினாலும் சரி அதிகமானோர் மேற்கொள்வது உணவுக் கட்டுப்பாடு. ஜனரஞ்சகமான பாஷையில் சொல்வதாயின், 'டயட்' பண்ணுதல் - நீரிழிவு, இருதய நோய், மூட்டுக் கால் வலி, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்த் தொல்லைகளுக்கு ஆளாகுபவர்கள் அதிகமாகக் குண்டாகுவது ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல என்பதால், உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளுமாறு வைத் தியர்கள் கூறுகின்றனர்.



உணவுக் கட்டுப்பாட்டால் கொழுப்பைக் குறைக்க முடியுந்தான். ஆனால் இதனால் ஒருவர் மந்த போஷாக்குக்கு ஆளாகநேரிடுவதாகப் போஷாக்கு நிபுணர்கள் கூறுகிறார்கள்.

சாப்பிடும் ஒவ்வொரு தடவைக்கும் 4 - 5 நிமிட இடைவெளி விடவேண்டும். இவ்வாறான முறைகளில் அநேகர் கொழுப்புக் கரைந்து மெலிந்த உடலைப் பெற்றார்கள். ஆனால் ஓரிரு வருடங்கள் சென்ற பின்னர் முன்பிருந்ததை விட கொழுத்துவிட்டார்கள்.

நாம் உட்கொள்ளும் ஒவ்வொரு உணவும் எளிதாக ஜீரணமாக அன்றாடம் உடலில் செய்ய வேண்டிய சக்தியைத் தருகின்றன. மேலதிகமாக எவையேனும் எஞ்சியிருப்பின், அது கொழுப்பாகி தோலுக்குக் கீழ் கட்டியாகி விடு கின்றன.

எந்த நாளும் இவ்வாறு மேலதிகமாகச் சாப்பிடுகின்ற போதுதான் கொழுப்பு அதிகம் அதிகமாகச் சேர்ந்து குண்டான உடம்பு உண்டாகிறது.

அத்துடன் உடலுக்குத் தேவையான போஷாக்கு வகைகள் அனைத்தும் கிடைக்காமல் போவதால், மனநிலை பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொண்ட பெண்கள் உடல் அழகாகி, நிறையும் பெருமள வில் குறைந்தாலும், அவர் களின் மன நிலையும் ஞாபகசக்தியின் அளவும் குறைந்திருந்ததாகக் கண்டறியப்பட்டது. (தொடரும்)

# வெற்றியின் இரகசியம்




வெற்றி என்பது ஒரு பாடத்திட்டம். இதை அனுபவ ரீதியாகவோ, அறிவு ரீதியாகவோ முறையாகக் கற்றுக்கொண்ட மனிதனே வாழ்க்கையில் வெற்றி பெற்றுள்ளான். வெற்றிக்கென்று தனித்தன்மை வாய்ந்த இரண்டு விதிமுறைகள் உள்ளன. இது மிகவும் சுலபமான வழிதான்- ஒன்று அதாவது உங்கள் பாதையை நீங்கள்தான் தெரிவுசெய்ய வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் பல தொழில்கள் தெரிந்திருக்கலாம். ஆனால் குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்வதுதான் வெற்றிக்குத் தெரிவுசெய்யவேண்டிய முதற்படி. பின்பு அதை புத்திசாதுரியத்துடன் தொடர்ந்து செல்லுதல். இரண்டாவது - நீங்கள் சென்றுகொண்டிருக்கும் பாதையில் பல தடைகள் வரலாம். எத்தனை தடைகளைத் தாண்டவும் மனதில் உறுதியும், தியாகமனப்பான்மையும் இருப்பது அவசியமாகும். இதுதான் ஆரம்பப் படிகள்.

இதைத் தொடர்ந்து நீங்கள் வெற்றிக்காகச் செய்யவேண்டியது நாளைய வேலையைச் சிறப்பாக்குவது பற்றி ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் சிந்திக்கவேண்டும். நல்ல சிந்தனைகள்தான் மனிதனை வெற்றியின் பக்கம் கொண்டுசெல்லும் சக்தியாகும். இந்தச் சிந்தனையில் வரும் ஒவ்வாமைத் தாக்குதல்களான அன்பு, பாசம், நட்பு, உணர்வுகள் இவைகளை நாம் சிலபோது தியாகம் செய்ய வேண்டும். அப்படிச் செய்பவன்தான் வெற்றியாளன்.

நீங்கள் கற்கும் அறிவுதான் வெற்றியின் சக்தி என்று எண்ணிவிடாதீர்கள். அறிவு சக்தியாக ஆகிவிடாது. எந்தவொரு வேலைக்கும் அதைப் பயன்படுத்தும் விதம்தான் சக்தி ஆகிறது. உங்கள் அறிவை வெற்றிக்காகப் பயன்படுத்தும் முறைகள் எப்படியென்றால் வெற்றியை சக்தி என்ற ஒவ்வொரு படியாலும் ஏறவேண்டும். (தொடரும்)

# மனமே! மீண்டெழுவாய்



போர் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணங்களால் பல்வேறு வகையில் உளநலம் பாதிப்புக்குட்பட்டவர்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு. அவர்களின் மனதை ஆற்றுப்படுத்தும் முகமான கருத்துக்களை உள்ளடக்கி இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரிக்கப்படுகிறது.

*(குடும்பத்தை இழந்து மற்றும் உறவுகளை, சொத்துக்களை இழந்து தனித்த சிறுவர்களைத் தேற்றுதல்).*

மனமே! உன் தாய் தந்தையும், உடன் பிறப்புக்களும் கடலோடு சென்று விட்டனர் என்ற செய்தி உன்னை வேதனைக்குள்ளாகிக் கொண்டிருக்கிறதா? நீ படிப்பதற்காக உன் குடும்பத்தை விட்டு விலகியிருந்தாயா? செய்திகேட்டு ஊருக்கு ஓடோடி வந்த போது, உன்னை அன்புடன் எதிர்பார்த்திருந்து வரவேற்கும் அன்னையுமின்றித் தந்தையுமின்றி, உடன்பிறப்புக்களுமின்றி ஏன் உன் இருப்பிடமே தெரியாமல் தத்தளித்தாயா? ஐயோ அம்மா! அப்பா! அண்ணா! தம்பி! தங்கை என்று ஓலமிட்டு அழுதாயா?

கொடுமையிலும் கொடுமை. எவருக்குமே இல்லாத துன்பம். நீ படிப்பதற்காகப் பிரியாதிருந்தால் நீயும் ஒன்றாய்ச் சேர்ந்து தொலைந்திருக்கலாம். அதுதான் நிம்மதி என்கிறாயா? இன்று நீ உறவின்றி, வீடின்றிச் சொத்துப்பத்து எதுவுமின்றி, அயலும் இன்றி, இரத்த உறவுகளுமின்றித் தவிக்கிறாயா? திக்குத் தெரி யாத காட்டில் நடு இரவில் நீ தனித்திருக்கும் நிலையிலும் மேலாக உன்மனம் பயத்தாலும், அச்சத்தாலும், முடிவு தெரியாமலும் தத்தளிக்கிறாயா?

மனமே! இந்தத் தவிப்பு அடிக்கடி உன் மனதில் தோன்றிய வண்ணமிருக்கும். அத்தகைய உணர்வுகள் அலைமோதி வேதனைப் படுத்துவதும் தவிர்க்க முடியாததுதான். அத்தனை மன உணர்வுகளையும் அலசிக் கொண்டிருப்பதே மனதின் இயக்கசக்தி என்பதை சிறு பராயத்தில் இருக்கும் நீ தெரிந்தும், தெரியாமலும் இருக்கலாம்.


மனமே! உனக்கேற்பட்ட இழப்பு வேறு எவருக்கும் ஏற்பட்டிருக்காது என்று நினைப்பாய். கடவுளிடம் நியாயம் கேட்பாய். கடவுளை நினைக்கமாட்டேன் என்பாய். உனக்கென்று எவருமே, எதுவுமே இந்த உலகில் இல்லாதபோது, நீயேன் வாழ்வான் என்று உன் மனதுக்குள்ளிருந்து நீ எழும்பி உன்னைச் சுடுவதுபோல் இருக்கிறதா?

மனமே! இந்த நிலை உன் அடிமனதைப் பாதிக்கும் செயல் என்பதை நீ உணரல் வேண்டும். இத்தகைய மன எரிவும், பிரிவும், இழப்பின் வேதனைகளும் உன் அடி மனதைத் தாக்கிவிட்டால், உன் இளமனதைத் தாக்கிவிட்டால் உன் நீண்டகால வாழ்க்கையை நிலைதளரச் செய்துவிடும். கடவுளால் படைக்கப்பட்ட உன் உயிரை நீதான் வாழவைக்கவேண்டும். உன் உயிரில் சேர்ந்திருப்பவன் உனக்குள் இருப்பவன் இறைவன் என்பதைச் செவிமடு. அந்த இறையை மகிழ்வாய் வாழவைக்க மனமே! நீ அழு. வேண்டியவரை அழு. திட்டு, கோபப்படு, ஆனால் பெருமூச்சுவிடும் அளவுக்கு மட்டும் உன் மனதை வேதனைக்குள் தள்ளாதே. எல்லா வேதனை எழுச்சிகளையும் ஒருமுறை, ஒரே நாளிலே அழுது தீர். அதன்பின் அந்த நினைவுகளையும், அழுகையையும் நிறுத்திக்கொள்.

மனமே! நான் சொல்வதன்படி உன் மனதை நிறுத்திக்கொள்ள முடியாது என்பது எனக்குத் தெரியும். அனுபவங்கள் நிரம்பாத உன் மனதுக்கு முடியாத காரியமாகத்தான் இருக்கும். மனமே! தாயைப் பிரிந்த கோழிக்குஞ்சும், தாயை இழந்த மாட்டுக் கன்றும் தாயை நினைத்து நினைத்து அழுந்தி, தாயின் நினைவுக்குள் மூழ்கிக்கொண்டிருக்காமல் தன்னைச் சூழலுடன் இணைத்து, தனக்குரிய ஸ்திரத் தன்மையைப் பெற்று பெரியவையாகி மகிழ்வுடன் வாழ்வதை உற்றுநோக்கிச் சிந்தித்துப்பார்.

மனமே! நீ மனிதக் குழந்தை. மொழி என்ற ஒன்று உன்னிடத்தில் உண்டு. மொழியின் உதவியால் இந்தச் சமூகத்தில் உன்னால் நீந்தமுடியும். சமூகத்தில் எதிர்நீச்சலடிக்க முடியும். நீ படித்துக் கொண்டிருக்கிறாய். இன்னும் படிக்க வேண்டும். மேலும் படிப்பதன் மூலம்தான் உன் மனதைத் திடப்படுத்திக் கொள்ளமுடியும். கல்வியே உனக்கு, நீ இழந்த இழப்புக்கு மேலான செல்வம் என நினைத்துக்கொள். இன்றே எழுந்துவிடு. உன் கல்விக்கான விருப்பை நிறைவேற்ற பல உதவி வழங்கும் நலன் விரும்பிகளிடம் தெரிவிக்க முடியும். உன்னைத் தாங்கும் சக்திகள் எம் சமூகத்தில் விழிப்புப்பெற்று உயிரூட்டம் தர இருக்கிறார்கள். மனமே! நீ வாழமுடியும். வாழ்ந்தே தீர வேண்டும். இந்த உலகம் அற்புதமானது என்பதை நீ தனித்து நின்று அனுபவிக்கமுடியும். அதில் இன்பம் காண மனமே! மீண்டெழுவாய்.

– மலர் சின்னையா –




மனோன்மணி சண்முகதாஸ்

## 3ஆம் அத்தியாயம்

பெத்தா!... நான் கூப்பிட்டபடியே வீட்டிற்குள் நுழைந்தேன்! வாசலில் பெத்தா இல்லை. வழக்கமாக நான் பள்ளிக்கூடம் முடிய வீட்டுக்கு வரும்போது அவள் வாசலில் காத்துநிற்பாள். நான் தூரத்தில் வரும்போதே அவளைக் கண்டு விடுவேன். அம்மா அப்படி என்னைக் காத்து நிற்பதில்லை. அவள் அடுக்களையில் ஏதாவது செய்து கொண்டிருப்பாள். நான் மீண்டும் கூப்பிட்டேன்.

பெத்தா!

அவள் தலைக்கறுப்பைக் காணவில்லை. உள்ளே போனேன். என்காற் செருப்பைக் கழற்றி விறாந்தையில் வைத்தேன். பூனை போல் உள்ளே போனேன். கொட்டிலில் உலக்கையோடு பெத்தா நின்றாள். அவளுக்குக்கிட்ட அந்த மான்சோடா மாமா நிற்கிறார். என்னைக் கண்டதும் பெத்தா உலக்கையைக் கீழே வைத்துவிட்டு என்னிடம் வந்தா!

நல்ல நேரம் நீ வந்திட்டாய்!...

பெத்தாவின் குரலில் ஒரு நிம்மதி தெரிந்தது. மான்சோடா மாமாவைப்பார்த்தேன்! அவர் வில்லங்கமாகச் சிரித்தார்!

என்ன இண்டைக்குப்பள்ளிக்கூடம் வெள்ளென முடிஞ்சிட்டுதோ! அவர் குரலில் ஒரு குழப்பம்!

இண்டைக்கு எங்கடை ரீச்சருக்குக் கலியாணம்! அதுதான் பள்ளிக்கூடம் வேளையோடை விட்டிட்டுது!

நான் சொல்லியபடி திண்ணையில் குந்தினேன்.

பரிமளம் நீ இப்ப எத்தினையாம் வகுப்புப் படிக்கிறாய்!.

அவருடைய கேள்வி எனக்கு கொஞ்சம் அலுப்பாய்இருந்தது.

'மூண்டாம் வகுப்பு...' என் பதிலில் கொஞ்சம் வெறுப்பைக்காட்டினேன். பெத்தா அடுக்களைக்கை போட்டாள். நான் அவரோடை என்னத்தைக் கதைக்கிறது? ஆனால் என்ரை மனதிலை ஒரு கேள்வி எழும்பிக்கொண்டிருந்தது.

நான் இஞ்சை கிட்டடில ஒரு அலுவலா வந்தனான். அதோடை உன்னையும் பாத்துப் போகலாம் எண்டுநினைச்சு வந்தன். அவர்பொய் சொல்வது எனக்கு விளங்கியது. நான் பேசாமல் நின்றேன். பெத்தா வெளியே வந்தாள். அவள் முகத்தில் கலவரம்!

அப்ப நான் போட்டு வாறன்...!



அவர் புறப்பட்டார். நான் தலையை அசைத்தேன். அவர் மீண்டும் பெத்தாவுக்கு கிட்டப் போனார். ஏதோ மெல்லிய குரலில் சொன்னார்! பிறகு எனக்குக் கிட்ட வந்தார். என் கன்னத்தில் கிள்ளினார்! எனக்கு வெறுப்பாயிருந்தது. நான் பெத்தாவைப் பார்த்தேன். அவள் முகத்தில் கோபம் குடியேறியிருந்தது. அவர் விறுவிறு என்று நடந்து வெளியே போனார். ஏன்! இவ்வளவு கோபத்தோடு போகிறார்?

பெத்தா என்னருகே வந்தா! இட அவளின் முகத்தில் சாந்தம் குடியேறி இருந்தது.

நல்ல காலம் மேனே நீ வெள்ளென வந்திட்டாய்!...

'பெத்தா எனக்குப் பசிக்குது'.

'சரி வா சாப்பாடு தாறன்'.

அடுக்களையுள் பலகைக் கட்டையைப் போட்டு மூடலைக் கவிழ்த்து வைத்தாள். மூடலுக்கு மேல் என்ர பூப்போட்ட வெள்ளைக் கோப்பை !... அம்மப்பா வாங்கித் தந்தது! அதை வைத்தாள். கோப்பையில் இருந்த றோசாப் பூக்களைப் பார்த்தேன். நல்ல வடிவான பூக்கள். அது மாதிரிக் கோப்பை எங்கட வீட்டில எனக்குத்தான். மற்றவைக்கு இல்லை. அதால அந்தக் கோப்பைக்குப் 'பரிமளத்தின்ர கோப்பை' எண்டு எல்லாரும் பெயர் வைச்சிருக்கினம். கோப்பையிலிருந்த றோசாப் பூவை உற்றுப்பார்த்தேன். அதற்குள் அம்மப்பாவின் முகம்.... தெரிந்தது! எனக்கு மனதில் சோகம். பாவம் பெத்தா...! அவளைப் பார்த்தேன்!..கண்களைச் சுற்றிக் கறுப்பு வட்டம். முகமெல்லாம் வாடிக்கிடந்தது. அவளின்ர கழுத்திலை இருந்த மஞ்சள்கயிறு ... அது இல்ல. கழுத்து மூளியாகக் கிடந்தது. என்ர கழுத்தைத் தடவினேன். அம்மப்பாவின்ரஅந்த மணிச்சங்கிலி தட்டுப்பட்டது.

'என்ன மேனே கழுத்தைத் தடவுறாய்'

பெத்தாவின்குரல்என்னைத் திடுக்கிட வைத்தது. கோப்பையில் வெள்ளைச் சோறு வைத்து, அதற்கு மேல் விளைமீன்குழம்பை ஊற்றினாள். குழம்பின் வாசம் மூக்கை நிறைத்தது. அதற்குப் பக்கத்தில் நெத்தலித் தீயலை வைத்தாள். மாங்காய் போட்டு... அதன் வாசம்! விளைமீன் குழம்பு இப்ப இரண்டாம் இடத்துக்கு வந்திட்டுது. இன்னும்அவள் அகப்பையால் அள்ளிய இறால் பொரியல்... அதன் வாசம் வீடுமுழுக்கப்பரவியது. இப்ப நெத்தலித்தீயல் இரண்டாம் இடத்தைப் பெற... நான் இறால் பொரியலை அள்ளிவாயில் வைத்தபோது பெத்தா சொன்னாள்.

சோத்தோடை சேர்த்துக் குழைச்சுச் சாப்பிடு மேனே! நான் கையிலை எடுத்த இறால் பொரியலை வெள்ளைச் சோத்தோடு சேர்த்துப் பிசைந்து சாப்பிட்டேன். அதன் சுவையே தனி! பெத்தாவை நன்றியோடு பார்த்தேன். பெத்தா விளைமீன் துண்டின் முள்ளைப் பக்குவமாகத் துப்பரவு செய்ய, நான் மளமளவென்று சாப்பிட்டு முடித்தேன். கடைசியாக பெத்தா விட்ட இறால் மூஞ்சியிலை வைத்த சொதி எனக்கு அம்மப்பாவை மீண்டும் ஞாபகப்படுத்தியது. அவர் அதை ருசித்துச்சாப்பிடுவார். பெத்தா பரிமாற, அவர் சாப்பிடும் காட்சி அற்புதமாக இருக்கும். ஆனால் என்னுடைய அப்பா! அவர் நேரம்கெட்ட நேரத்தில் வந்து சாப்பிடுவதும் அம்மாவோடு சண்டை பிடிப்பதும் .... இந்தக் கடவுள் அம்மப்பாவை விட்டிட்டு என்ர அப்பாவைக் கூட்டிக் கொண்டு போயிருக்கலாம்...

பிள்ளை என்ன யோசனை! அம்மாவின்ர எண்ணம் வந்திட்டுதோ! நான் ஒண்டும் பேசாமல் உரலடியில் போய்நின்றேன்!.

பெத்தா நெல்லை மீண்டும் குத்தத் தொடங்கினா. நான் பெத்தாவின் கழுத்தைப் பார்த்தேன். அவ உலக்கையை வீசிப் போட்ட போது மிக அழகாக இருந்தது. எனக்கும் நெல்லுக் குத்த வேணும் போல இருந்தது.

பெத்தா நானும் நெல்லைக் குத்தப் போறன்.

சரி வா. அந்தப் பொக்கணை உரலுக்கை கொஞ்சம் போட்டுத் தாறன். பெத்தா பக்கத்திலிருந்த பொக்கணை உரலுக்கைஇரண்டு



சிறங்கை நெல்லைப் போட்டாள். நான் சம்பல் இடிக்கும் உலக்கையை எடுத்து குத்தத் தொடங்கினேன். கொஞ்ச நேரத்தில் கையெரியத் தொடங்கிவிட்டது. நான் உலக்கையைக் கீழே போட்டேன். 'மேனே நீ ஏன் இப்ப அவசரப் படுகிறாய்! வயது வந்தாப் பிறகு எல்லா வேலையும் செய் யலாம்!

'பெத்தா சொன்னது சரிதான். நான் அதை ஒத்துக் கொண்டு, பேசாமல் போய் இன்னொரு உரலில் இருக்கப் போனேன். பெத்தா சொன்னா!

'உரலிலை இருக்கக் கூடாது பிள்ளை'.

நான் திருப்பி எதுவும் கேட்கவில்லை. ஒத்துக் கொண்டு அருகிலிருந்த பலகைக் குற்றியில் குந்தினேன். பெத்தா குற்றிய நெல்லைச் சுளகிலே போட்டுப் புடைக்கத் தொடங்கினா. நான் அவவின்ர வெறுங்கழுத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

பளிச்சென்று எனக்கொரு எண்ணம் தோன்றியது!

தொடரும்...

---

# அதநிலை மாற்றத்தின் அவசியம்

ஆதிலட்சுமி சிவகுமார்

பெண் என்பவள் ஆற்றல்களும், ஆளுமையும் நிறைந்த மனிதப் பிறவி. ஆனால் சமூகத்தில் பெண்களின் நிலை மிகவும் துயரமானதாக இருக்கிறது. அறுபதுவீதமான பெண்கள் தமது மன உலகக் குகையைவிட்டு வெளியேவர - வெளியுலகத்தைத் தரிசிக்கத் தயக்கம் காட்டுபவர்களாகவே காணப்படுகின்றனர். கல்வியியல், பொருளாதாரத்தில் குறிப்பிடக்கூடிய நிலையில் காணப்பட்டாலும், காலம் உருவாக்கிய பெண் என்னும் கருத்துலக மாயையில் இருந்து விடுபட மறுக்கின்றனர். ஆனால் அஞ்சுகின்றனர். இவர்கள் எப்போதும் தங்களுடைய பெறுமானத்தை உணர்ந்து கொள்ளாமல் ஏதோ ஒரு திரைமறைப்பின் பின் வாழ முயற்சிக்கின்றனர்.

✦ விழா ஒன்றில் விடியோப் படம் பிடித்துக்கொண் டிருந்தார்கள். என்னருகே இருந்த பெண் (20 -25 வயதுக்குள் இருக்கலாம்) தலையைக் குனிந்து தன் முகம் தெரியக் கூடாது என இருந்தார்.

'ஏன் தலையைக் குனிந்து கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டேன் பதில் சொல்லாமல் சிரித்தாள்.

'சொல்லுங்கோ... ஏன் முகத்தை மறைச்சனீங்கள்?'... விடாமல் தொடர்ந்து கேட்டேன்.

'என்ர முகம் வடிவில்லை... வெருளி மாதிரிக் கிடக்கு...' என்றார். 'ஏன்?.. வடிவாய்த்தானே இருக்கிறீர்கள்?... ஆரும் சொன்னவையே வடிவில்லை என்று?...'

'இல்லை' தலையை மட்டும் ஆட்டினாள்.

✦ எனக்குத் தெரிந்த இன்னொரு பெண் - பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோது, சந்தித்தேன்.

'இப்ப என்ன செய்துகொண்டிருக்கிறியள்?...' கேட்டேன்.

'சும்மா இருக்கிறன்...'

'ஏன் கொம்பியூட்டரெல்லோ படிச்சனீங்கள். படிச்சுப் போட்டு சும்மா இருக்கிறியளே?...'

'முழுக்கப் படிக்கேல்லை... இடையில விட்டுட்டன்...'

'ஏன்?...'

'கிளாசுக்குப் போய்வரேக்க பெடியள் வழியில நிண்டு 'அப்பிள் பெண்ணே நீயாரோ' எண்டு பகிடிவிட்டாங்கள். எனக்கு ஒரு மாதிரிப்போட்டு. வகுப்பை விட்டிட்டன்...' என்றார்.

✦ இன்னொரு பெண் திருமணமானவர். கதைத்துக்கொண்டிருக்கும்போது கூறினார்.

இவர் (துணைவர்) சனி, ஞாயிறுகளில் தான் வீட்ட வாறவர். மற்றைய நாளையில நான் அக்கா வீட்டை போயிடுறது...

'ஏன் வீட்டில நிக்கிறேல்ல... பயமா?...'

'எனக்கொரு பயமும் இல்லை.. தனிய வீட்டில நிக்க.. ஆரும் ஏதும் சொலுவினம் ... அங்க போயிட்டா பிரச்சினையில்லை...'

இப்படிச் சின்னச் சின்னக் காரணங்களுக்கெல்லாம் பெண்கள் தம் வாழ்க்கையைப் பாழாக்குகிறார்கள்.

எனது அக்காவின் மகன் கேட்டான் -

'சித்தி அப்பிள் ஏன் இனிக்கிறது?...'

'ம்... அதில சீனித்தன்மை இருக்கு... அதாலை இனிக்குது...'

'அதுக்கில்லை...' அவன் சிணுங்கினான்.

'அப்ப என்னத்துக்கு?...'

'உலகத்தில முதன்முதலில தோன்றின பொம்பிள ஏவாள் கடிச்சதாலதான் இனிக்குது...'

'ஆர் சொன்னது?...'

'காதலர் தினத்தண்டு பேப்பரில படிச்சனான்...'

சின்னஞ் சிறுவயதில் பெண்பற்றிய கருத்துருவாக்கியங்கள் இப்படித்தான் மனங்களில் பதியம் வைக்கப்படுகின்றன.

'நானும்வாழ்க்கையில் நல்லாவந்திருப்பன்... ஒரு மேனகை குறுக்கிட்டு இருக்காவிட்டால்...' என்றார் ஒரு இளைஞன்.


(இவர் அழகுசாதனைப் பொருட்களை விற்கும் கடை ஒன்றை வைத்திருக்கிறார். படித்து பல்கலைக்கழகம் சென்று, உயர் உத்தியோகம் பார்க்கவேண்டுமென்பது இவரின் தவம். ஆனால் காதல் இவரைத் தவத்திலிருந்து குழப்பி விட்டதாம்).

'யார் அந்த மேனகை?...' என்று கேட்டேன்.

'என்னுடைய மனைவிதான்...' என்றார்.

'தவத்தில் உறுதியில்லா மனவலிமை இல்லாத விசுவாமித்திரர்கள் தங்களுடைய பலவீனத்தை மறைக்க மேனகைகளைக் குற்றஞ்சாட்டுகிறீர்கள்.

நீங்கள் உங்கள் மனங்களைக் குழம்பாமல்



வைத்திருக்கலாம்தானே...' என்று கேட்டேன். அவர் சிரிக்க, அவர் அருகே இருந்த அவ ரது 'மேனகை'யும் சிரித்தார்.

(தொடரும்...)





வவுனியா - மருக்காரம்பளைப் பிரதேசத்தில் ஐங்கரன் முன்பள்ளி, கலைவாசம் முன்பள்ளி ஆசிரியர் இணைந்து நடத்திய முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வில் - மங்கள விளக்கை மருக்காரம்பளைப் பாடசாலை அதிபர் திருமதி. அருணாச்சலம் ஏற்றுவதையும், முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வுகளையும் படத்தில் காணலாம்.

# நூறு சமூக வலுவூட்டாளர்களுக்கு அபிவிருத்தி தொடர்பான பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

சுனாமி கடல் அனர்த்தத்தாலும், போர்ச்சூழல் காரணமாகவும் தங்களது வாழ்வாதாரங்களை இழந்து, நிர்க்கதியாகியுள்ள மக்களின் சமூக, பொருளாதார வள அணிகளை மீளப் புனரமைத்து, அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகச் சமூக வலுவூட்டாளர்களுக்கான பயிற்சிநெறி - தமிழர் புனர்வாழ்வுக்கழக சமூக வலுவூட்டல் பிரிவினரால் ஒழுங்குபடுத்தப்பட்டு, அதற்கான பயிற்சிநெறி வகுப்புகளும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முதற்கட்டமாக வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 100 இற்கும் மேற்பட்ட வலுவூட்டாளர்களுக்கான பயிற்சி நெறி வகுப்பு - கடந்த சனிக்கிழமை அன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையின்கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் 'வெண்புறா' செயற்கை உறுப்பு தொழில்நுட்பப் பிரிவின் பன்நோக்கு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த செவ்வாய் கிழமை ம, பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற நான்காம் நாள் பயிற்சி நிகழ்வில் - தமிழர் புனர் வாழ்வுக்கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் கே.பி.றெஜி கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். சமூக வலுவூட்டாளர்களின் பணிகள் பற்றியும், அந்தப் பணிகள் தொடர்பான முக்கியத்துவம் பற்றியும் தெளிவாக எடுத்துவிளக்கிய அவர் - போர்ச்சூழல் காரணமாகவும், சுனாமிக் கடல் அனர்த்தம் காரணமாகவும் மக்கள் எதிர்நோக்கிவந்த, எதிர்நோக்கி வருகின்ற இன்னல்கள் பற்றியும், அவற்றின் எதிர்விளைவுகளாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பற்றியும், பொருளாதாரப் பின்னடைவுகள் பற்றியும் எடுத்துக் கூறியதுடன், அந்த மக்கள் மத்தியில் ஒவ்வொரு சமூக வலுவூட்டாளரும் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகள் பற்றியும், சமூக வலுவூட்டாளர்களின் அணுகுமுறைகளைப் பொறுத்தே அந்தந்தக் கிராமங்களில் வாழ்ந்து வருகின்ற மக்களின் முழுமையான பங்களிப்புக்களுடன்கூடிய புனரமைப்பு, புனர்நிர்மாண அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கமுடியும் என்பது தொடர்பாகவும் எடுத்துவிளக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் - தமிழர் புனர் வாழ்வுக்கழகத் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, தமிழர் புனர்வாழ்வுக்கழக வலுவூட்டல் பிரிவுப் பணிப்பாளர் மா.செல்வராசா, நிகொட் நிறுவன திட்ட இணைப்பாளர் சுடர் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியதையடுத்து பயிற்சிநெறி தொடர்ந்தும் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடற்கரும்புலி மேஜர் ரதனின் 9 ஆம் ஆண்டு நினைவுநாள்

கடற்கரும்புலி மேஜர் ரதனின் 9 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. தூயவன் அரசறிவியற் கல்லூரியில் போராளி ஜெயசீலன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வின் பொதுச் சுடரைக் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கண்ணதாசன் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை கேணல் ரமேஸ் ஏற்றிவைத்தார். மேஜர் ரதனின் திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரை - குட்டிசிறி மோட்டார்ப் படையணியின் சிறப்புத் தளபதி கோபால் ஏற்றிவைத்தார். திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை பொன்னம்மான், கண்ணிவெடிப் பிரிவுப் பொறுப்பாளர் அஸ்வினி அணிவித்தார்.

தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றன. இதில் போராளிகள், பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



## வன்னிப் பதிவுகள்

## ஒலிபெருக்கி அன்பளிப்பு

வவுனியா - அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்துக்கென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் - ஒலிபெருக்கி சாதனம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்தப் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டபோதே பாடசாலை அதிபர் நடேசமூர்த்தியிடம் இதனைக் கையளித்தார். (03)

## சிரமதானப் பணி

வவுனியா பூந்தோட்டம் பொது மைதானத்தில் - நாளை சிரமதானம் செய்யப்படவுள்ளது. அன்னை பூபதியின் நினைவாகவே இந்தச் சிரமதானப் பணி நடைபெறவுள்ளது.

இந்தச் சிரமதானப் பணியில் அரசியற்துறைப் பொறுப்பாளர், போராளிகள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் இந்த சிரமதானப் பணி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (03)

## நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் உதவியுடன், கோணாவில், காந்திநகர் கிராம மக்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் பம்பிகள் என்பன வழங்கப்பட்டன.

கோணாவில் கிராமப் பொது மண்டபத்தில் மானிய அடிப்படையில் இந்தப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்து பேர் கொண்ட குழு தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கு இந்தப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## கிளிநொச்சி மாவட்டம் முழுவதும்
## சிறுவர்களுக்கு உயிர்ச்சத்து மருந்து வழங்குவதற்கு நடவடிக்கை!

ஆறு மாதம் தொடக்கம், ஐந்து வயதுவரையான சிறுவர்களுக்கு உயிர்ச்சத்து 'ஏ' மருந்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, கிளிநொச்சி மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

இந்த மாதம் 30 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இது தொடர்பாக குடும்பநல உத்தியோகத்தர்களிடம் மேலதிக விபரங்களைப் பெறமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு உயிர்ச்சத்து 'ஏ' வழங்குவதன் மூலம் கண் தொம்பி போன்ற பல்வேறு நோய்களிலிருந்து சிறுவர்களை விடுவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கிளிநொச்சி - சுண்டிக்குளம் பகுதியில் சரணாலயம் அமைப்பதற்கான சூழல் இல்லை
### அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவிப்பு

கிளிநொச்சி சுண்டிக்குளம் பகுதியில் விலங்குகள் சரணாலயம் அமைப்பதற்கான சூழல் இல்லையென, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

அண்மையில் சுண்டிக்குளம் பகுதிக்குச் சென்ற ஆய்வாளர்கள் குழுவொன்று - இந்தப் பகுதியில் பறவைகள், விலங்குகள் சரணாலயம் ஒன்று அமைப்பதற்கான சூழல் இருப்பதாகக் கருத்து வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் சுண்டிக்குளம் பகுதியில் பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டதாகவும், விலங்குகள் சரணாலயம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற கருத்து சூழலியல் ஆய்வாளர்களால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஏப்ரல் - 15

1766 : நரம்புத் தொகுதியின் தன்னியக்கச் செயல்பற்றி விரிவாக விளக்கிய பிரிட்டனைச் சேர்ந்த புகழ்பெற்ற மருத்துவவியலாளர் "ரோபர்ட் வைட்" காலமானார்.

1793 : முதன் முதலாக இங்கிலாந்து வங்கியான 'பாங்க் ஒவ் இங்கிலாந்து' ஐந்து பவுண்ட் பெறுமதியுடைய பணத்தாளை அச்சிட்டு வெளியிட்டது.

1865 : வோஷிங்டன் நாடக அரங்கில் வைத்து சுடப்பட்ட ஆபிரகாம்லிங்கன் காலமானார்.

1914 : மத்திய அமெரிக்காவில் பனாமா கால்வாயில் அமைக்கப்பட்ட உலகிலேயே மிக நீளமான மதகான "மிராஃப் ளோர்" மதகு திறந்து வைக்கப்பட்டது.

1917 : ஏசியன் கடலில் மிலோ அருகில் அர்காடியன் என்ற கப்பல் 279 பயணிகளுடன் ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பலினால் மூழ்கடிக்கப்பட்டது.

1923 : முதன் முதலாக பேசும் படம் நியூயோர்க்கில் "ரியால் டோ" திரை அரங்கில் பொதுமக்களுக்காகத் திரையிடப்பட்டது.

1925 : சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி "சோஷலிஸமே தனது குறிக்கோள்" என அறிவித்தது.

1954 : ஜப்பானிய நாடாளுமன்றமான "டையட்டில்" முதன் முதலாக ஒரு அமெரிக்கப் பெண்மணி உரையாற்றினார்.

✪ குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியம் மற்றும் நன்மைகள் பற்றி மார்க்கிரட் சாங்கர் என்ற பெண்மணியே உரை நிகழ்த்தியவர் ஆவார்.

1955 : விஞ்ஞானி ஐன்ஸ்ரின் மரணமானார்.

1967 : நியூயோர்க்கில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடி, வியட்நாம் போரில் இருந்து அமெரிக்கா விலக வேண்டும் என ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

1971 : பிறந்து இரண்டு நாட்களேயான குழந்தை ஒன்றுக்கு, அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரிலுள்ள ரோயல் அலக்சாண்டரா மருத்துவ மனையில் இதய அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

1974 : நைஜீரியாவில் இராணுவப் புரட்சி ஏற்பட்டது.

1985 : இனக்கலப்பு திருமணத்துக்கு தென்னாபிரிக்கா சட்டபூர்வமாக அங்கீகாரம் அளித்தது.

1986 : அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் லிபியாவின் திரிப்பொலி, பெங்காசி நகர்கள் மீது குண்டு வீசித் தாக்கின.

1989 : இங்கிலாந்தில் "ஷெப்பீல்டில்" நடந்த உதைபந்தாட்டப் போட்டியைக் காணத் திரண்ட கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி, 95 பேர்வரை இறந்தனர்.

✪ "ஜனநாயகம் அல்லது சாவு" என்ற முழக்கத்துடன் பலதரப்பட்ட அறிஞர்கள், இளைஞர்களைக் கொண்டதான இலட்சக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட பேரணி ஒன்று - சீனாவில் ஜனநாயகத்தைக் கொண்டுவரவேண்டும் என்பதற்காக நடைபெற்றது.

1992 : லிபியா மீது ஐ.நா.சபை விதித்த பொருளாதார, வர்த்தக, விமானப் போக்குவரத்துத் தடை நடைமுறைக்கு வந்தது.

1994 : காட் (GATT) ஒப்பந்தத்தில் 125 நாடுகள் கையெழுத்திட்டன.

1998 : ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்க நிரந்தரப் பிரதிநிதி "பில் ரிச்சர்ட்சன்" இலங்கை வந்தார்.

தொகுப்பு - சந்துரு

# சீனாவில் நடைபெறும் கண்காட்சிக்கு வர்த்தக சம்மேளன அங்கத்தவர்கள்!

சீனாவில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் சார்பில் 100 பேர் செல்லவுள்ளனர்.

இன்று கட்டுநாயக்கா ஹோட்டலில் வர்த்தக சம்மேளனம் சந்திப்பொன்றை மேற்கொண்டபின், இவர்கள் நாளை காலை சீனாவுக்கான பயணத்தை மேற்கொள்ள வுள்ளனர்.

இவர்கள் இருநாட்கள் தாய்லாந்தில் வர்த்தக நடவடிக்கைகளைப் பார்வையிடவுள்ளனர். இதில் நவீன இயந்திரங்கள் மூலம் சுயதொழிலை மேம்படுத்துவது, உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்த இயந்திரங்கள் கையாள்வது போன்ற விபரங்களை அறிவதாகவே இந்தப் பயணம் அமையவுள்ளது.

இந்தச் சுற்றுப்பயணத்தில் - வவுனியா மாவட்ட வர்த்தகக் கைத்தொழில் சம்மேளன அங்கத்தவர்கள் 21 பேரும் செல்லவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (03)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பிரார்த்தனையும், பிரதிக்கினையும்

மற்றுமோர் புதுவருடம் நேற்று முன்தினம் இரவு, கடந்த வருடத்தைப் போலல்லாது, ஆரவாரமோ படாடோபமோ பெருமளவுக்கின்றி காதைப் பிளக்கும் வெடிசத்தங்களற்ற சூழலில் ஆங்காங்கே பரவலாக ஒலித்த ஆலயமணிகளின் ஓசையுடன் புலர்ந்துள்ளது. கடந்த வருடமும் இதேபோன்றதோர் புத்தாண்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சூழலில் புலந்தவேளையில், மக்களுக்குத் தமது எதிர்காலச் சுபீட்சம் மற்றும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் இப்போது இல்லாதுபோய்விட்ட நிலையில் - கடந்த டிசெம்பர் 26 இல் விஸ்வரூபம் கொண்டெழுந்த சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தமானது ஏற்படுத்திய மனிதப்பேரழிவு அவலத்தின் தாக்கம் இன்னமும் அப்படியே உறைந்துபோயுள்ள சூழலில் பிறந்துள்ள புத்தாண்டை பரபரப்பும் - உற்சாகமும் கூடிய மகிழ்ச்சியுடன் கொண்டாடும் நிலையில் மக்கள் இல்லையென்பதும் முக்கிய விடயமேயாகும்.

கடந்த ஆண்டின் உதயத்திற்கும் அஸ்தமனத்திற்கும் இடையிலான ஓராண்டுகாலம் - அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியில் கழிந்துபோன ஓராண்டுகாலம் அவலத்தையும், ஏமாற்றத்தையும் நம்பிக்கையீனங்களையும், விலைவாசியுயர்வையும், வாழ்க்கைத்தர வீழ்ச்சியையும், மீண்டும் போர் உருவாகும் சூழ்நிலை குறித்த அச்சத்தையும் தவிர வேறு எந்த வகையிலும் - முன்னேற்றகரமான மகிழ்ச்சியை ஊட்டும் விதத்திலான எதனையும் மக்களுக்கு வழங்கவேயில்லை.

ஆட்சியில் அயர்ந்துள்ள அரசுக்கு அறுதிப் பெரும்பான்மைப் பலம் இல்லாதது ஒரு பலவீனம் என்றால், அந்த அரசை அமைத்துள்ள கூட்டணிக்கட்சியின் பங்காளிகள் இடையேயான கருத்து முரண்பாட்டு மோதல்களால் ஏற்பட்டுவரும் அதிகாரப் போட்டியென்பது மற்றொரு மிகமோசமான பலவீனம் என்பதால், ஸ்திரமான கொள்கைத் திட்டத்துடன் தேசிய நலன்கருதிக்கூட எந்தவொரு செயற்பாட்டையும் கடந்துபோன ஓராண்டு காலப்பகுதிக்குள் இந்த அரசால் செய்யமுடியாமல் போனது அசிங்கமான - அவலந்தரும் விடயமேயாகும்.

போர்க்காலத்தில் அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்நிலங்களும், வாழ்வும் தொடர்ந்தும் புனர்வாழ்வுக்கான - புனரமைப்புக்கான நடவடிக்கைகள் ஏதுமின்றி கடந்த ஆண்டிலும் உயர்பாதுகாப்பு வலய ஆக்கிரமிப்புக்குள் சீரழிந்த வண்ணமேயுள்ளது.

சமாதானத்தை எல்லாவகையிலும் எதிர்க்கும் பேரினவாத சக்திகளின் குரல், கடந்துபோன ஆண்டில் மிக பூர்க்கங்கொண்டு ஒலித்ததில் மீண்டும் போர் மேகம் சூழும் அச்சம் மக்களை பீதியடைய வைத்ததும், கடந்த 'தாரண' ஆண்டை நம்பிக்கையற்ற காலமாக அடையாளப்படுத்தியது.

கடந்த டிசெம்பர் 'சுனாமி' ஆழிப்பேரலையின் தாக்கம் அதனை அவலமதிகம் நிறைந்த ஆண்டாக வெறுக்க வைத்தது.

எல்லாவகையிலும் மற்றொரு இன்னல் நிறைந்த ஆண்டாக தாரணவருடம் முடிந்துள்ள நிலையில், புதிய பார்த்திப வருடம் புலர்ந்துள்ளது. பிறந்துள்ள இந்த வருடம் எப்படியானதாக அமையுமென இப்போதைக்கு எதிர்வுகூறல் செய்வது சாத்தியமேயில்லை.

தென்னிலங்கை அரசியல் தலைமைகளும், பௌத்த மதத்தலைமைகளும் இந்த ஆண்டிலாவது அறிவு பூர்வமாகச் சிந்தித்து மனோதர்மத்துடன் செயலாற்றி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை தேசிய மற்றும் மக்கள் நலன்களைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ள அவர்களுக்கு நல்ல புத்தியை இறைவனும், இயற்கையும் வழங்கவேண்டுமென்பதே அமைதியை நேசிக்கும் சகல தரப்பினரதும் புதுவருட பிரார்த்தனையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.


அர்தமற்ற பேரினவாத சிந்தனையாளர்களின் ஆபத்தான மதவாத பிரசாரமும் வரண்ட அதிகாரவாத ஆட்சியாளர்களின் பிடிவாதமான கருத்து நிலைப்பாடுகளும், இந்த நாட்டிற்கு எந்தவகையிலும் சுபீட்சமான எதிர்காலத்தை - எந்தக் காலத்திலும் உறுதிப்படுத்தப் போவதில்லை என்பதையே கடந்துபோன 'தாரண' ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டுகளும் அனுபவ பூர்வமாக கற்பித்துள்ளதை கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

புதிய பார்த்திப ஆண்டும் அர்த்தமுள்ள எதிர்பார்ப்புகளுடனும் அழுத்தமான அவநம்பிக்கைகளுடனும் தான் தொடங்குகின்றது என்பது இயல்பாக உணரக்கூடிய விடயமாக இருந்தாலும், நல்லது நடக்கும் நடக்கவேண்டும் என நம்புதலும் மனித இயல்பே.

அவலங்களும், துயரங்களுமற்ற வாழ்வு எம்மக்களுக்கு கிட்டவேண்டும் என்பது எமது புத்தாண்டு பிரார்த்தனையாக இருந்தால், இத்தகைய மகிழ்ச்சி மிக்க சுதந்திரமான வாழ்வை அவர்களுக்குரியதாக்க நாம் அனைவரும் ஒன்று திரண்டு போராடுவோம் என்பதே எமது புத்தாண்டுப் பிரதிக்கினையாக இருக்கவேண்டும்.

நல்லதை நினைப்போம், அல்லாததை அழிப்போம்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# கொண்டாட்டங்களைக் கனவு காணும் குழந்தை உள்ளங்கள்

நாளைக்குப் பெருநாள். சித்திரை வருடப்பிறப்பாக இருக்கலாம். தீபாவளித்ச் நாளாக அமையலாம். நத்தார்க் கொண்டாட்டமாக இருக்கலாட. ஏன் ரம்ளான் திருநாளாகவும் இருக்கலாம். குழந்தைகள், சிறுவர், சிறுமியர் அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் குழந்தைகள்தான். சிறுவர்கள் சிறுவர்கள்தான். பிறந்த நாள் கொண்டாட்டம் என்று கூட வைத்துக் கொள்ளலாம். இந்தக் கொண்டாட்டங்கள் வருவதற்கு முன்னர் பல நாட் களுக்கு முன்னரே கொண்டாட்டத்தின்போது எப்படியான உடை உடுத்த வேண்டும். எந்தெந்த வர்ணங்களில் ஆடை தைக்க வேண்டும், அன்று காலையில் எழுந்து என்ன செய்ய வேண்டும், எந்தக் கோயிலுக்குப் போவது, யாருடன் போவது, எந்த உறவினர் வீட்டுக்கு அதாவது - மாமா வீட்டுக்கா, சித்தப்பா வீட்டுக்கா முதலில் போவது. எந்த நண்பர்கள் வீட்டுக்குப் போவது, எந்த நண்பர்களை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வருவது, அப்பாவிடம் கேட்கக் கூடியது என்ன? அம்மாவிடம் என்னகேட்கலாம்.?

என் முன்னேவந்தமர்ந்த பரமசிவம் இப்படிச்சொல்லிக் கொண்டே போனார். பரமசிவம் மீண்டும் குழந்தையாகிவிட்டார் போலிருக்கிறதே என்று சீண்டினேன்.

நீர் சிறுவனாக இருந்தபோது - வருடப்பிறப்பு, தீபாவளி என்று கொண்டாட்டம் வந்தபோது நீர் என்னென்ன கனவுகள் கண்டிருப்பீர்? உமது தகப்பனார் உமது விருப்பத்துக்குரிய ஆடைகள் வாங்கித்தந்திராவிட்டால் அழுது குளறி அட்டகாசம் செய்திருப்பீர் நினைத்துப் பார்த்தீரா? என்று பரமசிவம் கேட்டார்.

உண்மைதான் அந்தச் சமயத்தில் தகப்பனாரின் கஷ்டம் பற்றியார் சிந்திப்பது என்றேன்.

இப்பொழுது போரினாலும், கடற்கோளினாலும் மற்றும் வேறு காரணங்களாலும் பெற்றோரை இழந்து நிற்கும் குழந்தைகள், சிறுவர்கள், சிறுமியரைப் பற்றிக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் அந்தப் பிள்ளைகளின் நிலை எப்படியிருக்கும் என்றார் பரமசிவம்.

பரிதாபத்துக்குரியநிலைதான். ஆனாலும்நல்ல உள்ளம் படைத்தவர்கள் நம் மத்தியில் இன்னமும் இருக்கிறார் கள். இவர்கள் எப்படியும் இந்தக் குழந்தைகளைக்கவனிக்காமல் விடமாட்டார்கள் என்றேன்.

நீர் சொல்வது உண்மைதான். நான் ஏதாவதுதொரு அகதி முகாமுக்குப் போய்ப் பார்க்க வேண்டுமென்று இன்று நினைத்தேன். அதற்கான வசதி கிடைக்கவில்லை. ஆனால் ஆண்கள், பெண்களாக அறுபது சிறுவர், சிறுமியர், பெற்றோர், உற்றார் பற்றிய கவலை எதுவுமில்லாமல் ஆடல், பாடல் விளையாட்டுக்களுடன் அவரவர் விரும்பிய புத்தாடைகளுடன் மகிழ்ச்சியாகப் புத்தாண்டைக்கொண்டாடிக் கொண்டிருந்த காட்சியைக் கண்டுமகிழும் பாக்கியம் கிடைத்தது.

சிறுவர்கள் 'டெனிம்' களிசான்களுடன் பல வர்ணச் சேட்டுக்கள் அணிந்திருந்தார்கள்.நல்ல பாதணிகள் பளபளத்தன. சிறுமிகள் நவீன களிசான் அணிந்து, சேட் அணிந்து உலாவந்தனர். எவருடைய முகத்திலும் சிறிதுகூடக் கவலையின் ரேகை இல்லை. நான்கைந்து வயதிலிருந்து, பதினான்கு பதினைந்து வயதுள்ள சிறுவர்களும், சிறுமியர்களும் புது வருடத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். இவர்களில் குழந்தையையும், தாயையும் கைவிட்டுப்போன தந்தையரினால் அநாதையானவர்கள் சிலர், தாயையும், தந்தையையும் இழந்தவர்கள் மற்றும் சிலர், தாய் இறந்துபோனதால் அநாதையானவர்களும் சிலர் உள்ளனர். இவர்களைக் கவனிப்பதற்கென்றும், சமையல் செய்வதற்கென்றும், கல்வி கற்பிப்பதற்கென்றும் பதினைந்துபேர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் இருக்கின்றனர். அதிகாலை நான்கு மணிக்கு சிறுவர், சிறுமியர் எழுந்துவிடுகிறார்கள். முதலில் பிரார்த்தனை, உடற்பயிற்சி, யோகாசனம், வழிபாடு, படிப்பு என்பன நடைபெறுகின்றன.

பின்னர் இவர்கள் நல்ல கல்விக் கூடத்துக்குப் படிக்கப் போகிறார்கள். மாலையிலும் உடற்பயிற்சி, விளையாட்டு, படிப்பு என்று நாள் நல்லமுறையில் முடிவடைகிறது'' என்றார் பரமசிவம்.

எங்கே போனீர்? எங்கே பார்த்தீர்? என்னையும் கூட்டிக் கொண்டு போயிருக்கலாமே என்றேன்.

புத்தாண்டுக்கு எங்கேயும் தொலைந்து போயிருப்பீர் அல்லது எங்காவது கலியாணச் சாப்பாடு தேடிப் போயிருப்பீர். சந்தர்ப்பம் கிடைத்தது நான் போனேன்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பொற்பதி வீதியில் ''தாயகம்'' என்றொரு இல்லம் நடைபெறுகிறது. இந்த இல்லத்தில் நான் கண்டவை, கேட்டவை பற்றித்தான் சொன்னேன், சொல்கிறேன். இங்கு பராமரிக்கப்படும் பெண்பிள்ளைகளில் ஐந்தாறுபேர் பருவமடைந்துவிட்டார்கள். இவர்களையும் பக்குவமாகப் பார்க்கிறார்கள்.

இந்தப் பெண் பிள்ளைகளில் ஒன்று இப்போது நடந்து முடிந்து, முடிவுகள் வெளியான சாதாரணதரப் பொதுப்பரீட்சையில் நல்ல புள்ளிகள் எடுத்துத் தேர்ச்சி பெற்றிருக்கிறது.

நான்கு சிறுவர்கள் இங்கு பராமரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்குள் வயது இடைவெளி குறைவு. தாயார் உயிருடன் இல்லை. இவர்களைத் தாயகம் காப்பாற்றும் என்ற துணிவுடன் தகப்பன் குறைந்துவரும் இனத்தைப் பெருக்க, இன்னொரு கல்யாணம் செய்துகொண்டு போய்விட்டாராம்.

இந்தப் பிள்ளைகளைத் தங்கள் பிள்ளைகள்போல் அக்கறையுடன் கவனிக்கும் தாயகத்தின் ''தகப்பன்'' ஶ்ரீதரன் குடும்பம் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஓர் அம்சமாக உலாவுக்கு அழைத்துச் சென்று ஐஸ்கிறீமும் வாங்கிக்கொடுத்ததையும், அழைத்துச் சென்றதையும் பார்த்தேன் என்றார் பரமசிவம்.

தாய் தகப்பன் இருந்தால்கூட இந்தக் குழந்தைகளை இப்படி ஒரு குறையும் இல்லாமல் கவனிப்பார்களா? என்று கேட்டேன்.

சந்தேகம்தான். அந்த வசதி எல்லாப் பெற்றோருக்கும் இருக்க முடியாது. தாய் தகப்பன் வசதிகளைப் பிள்ளைகளால் எப்படி உணர்ந்துகொள்ளமுடியும். எத்தனை வீட்டில் எத்தனை குழந்தைகள் கொண்டாட்ட தினத்தில் அடிவாங்கி திண்டாடுவார்கள். அடித்தபின் தங்கள் இயலாமைக்காகப் பிள்ளைகளைத் தண்டித்து விட்டோமென்று அழுது தீர்க்கும் தாய், தந்தைமார் எத்தனைபேர் என்றேன்.

''தாயகம்'' பிள்ளைகள் கொடுத்துவைத்தவர்கள் என்று சொல்லியபடியே எழுந்த பரமசிவம் - தாயகத்துக்குத் தந்தையாக ஶ்ரீதரன் இருக்கிறார். இப்படி எத்தனைபேர் முன்வருவர் என்று கேட்டார்.

☆ ☆ ☆

புத்தாண்டு தினத்தில் ஆலயங்களில் அபிஷேகங்கள், விசேஷ பூஜைகள் வழக்கம் போல நடைபெற்றன. நேற்று யாழ். நகரில் பெருமாள் கோவிலிலும், காலையில் ஶ்ரீரங்க நாத சுவாமிக்கும் மூலவருக்கும் அபிஷேகம், அலங்காரம், ஆராதனைகள் நடைபெற்றன. ஆண்களும், பெண்களுமாக வழமைபோல் தாங்கள் இடம் பிடித்துச் சுவாமியைத் தரிசித்து நின்றனர். வெளிநாட்டு, ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இரு இளம் பெண்களும் ஆலயத்துக்கு வந்து இவைகளைப் பார்த்து நின்றனர். சில சமயங்களில் கரம் கூப்பிக் கும்பிடவும் செய்தனர். அபிஷேகத்தையும், அலங்காரத்தையும் அவர்கள் ஆவலுடன் பார்ப்பதற்கு அவதிப்பட்டனர்.

எங்கள் அடியார்கள் கடைசிவரை விட்டு விலகி யாருக்கும் வழிவிடுவதில்லையென்று விரதம்பூண்டிருப்பவர்கள் என்பது அந்த வெளிநாட்டு இளம் பெண்களுக்குத் தெரியாது. ஒருவர் நமது பக்தைகளுக்கு இடம் விட்டுக் கொடுக்கச் சொல்லிக் கணநேரம் அந்த வசதி அவர்களுக்குக் கிடைத்தது. பின்னர் அந்தப் பெண்களில் ஒருவர் மூலவரைப் பார்த்தபடி முன் பக்கத்தில் சம்மணம் கொட்டி அமர்ந்திருந்தார். பிராத்தித்தாரோ? என்று மீண்டும் நின்று சொல்லி விட்டுப் போனார் பரமசிவம்.

# இந்த வார பலன்
## 15-04-2005 - 21-04-2005

| | | | |
|---|---|---|---|
| புத ராகு | சூ சுக் | | சந் சனி |
| யுரே | 16 ப. 3-01 கட-சந்<br>18 இ. 3-24 சிந்-சந்<br>21 ப. 1-57 கன்-சந் | | |
| செவ் நெப் | | | |
| | | | குரு கேது |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் பல நன்மைகள் ஏற்படும். பொருள் வருவாய் திருப்திகரமாக இருக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்படலாம். நண்பர்களாலும் பெரியவர்களாலும் உதவி கிட்டும். மங்கல கருமங்களும் கைகூட வாய்ப்புக்கள் உண்டு. உத்தியோகத்தர்கள் தமது பணிகளைச் சிறப்பாக ஆற்றி நல்ல அபிப்பிராயங்களைப் பெறுவர். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிட்டும். வர்த்தகர்களுக்குப் பொருளாதாரம் திருப்தியளிக்கும். வியாபாரமும் சிறப்பாக நடக்கும். தொழிலாளர்கள் தமது ஒத்துழைப்பால் பல கருமங்களைச் சாதிக்க முடியும். மாணவர் கள் கல்வியில் சிறந்து விளங்குவர். உயர் கல்வி கற்க வாய்ப்புகள் உண்டு.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருக சீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் சச்சரவுகள் தோன்றும். தொடங்குங் கருமங்களில் தடை தாமதம் ஏற்படும். எதிர்பாராத செலவுகள் தவிர்க்க முடியாமலிருக்கும். தேகசுகமும் பாதிக்கப்படலாம். புத்திரர்களால் உதவி தாமதப்பட்டே கிடைக்கும். திருமணப் பேச்சுக்களும் தாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்கள் பொது மக்களின் அவநம்பிக்கைக்கு ஆளாக வேண்டிவரலாம். அதிகாரிகளின் கெடுபிடி அதிகமாகலாம். வர்த்தகர்களுக்கு பழைய முதலீடுகள் விற் பனையாகாமல் தேங்கிக் கிடக்கும். வங்கி உதவிகள் உடன் கிடையாது. தொழிலாளர் மத்தியில் பிணக்குகள் தோன்றும் மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கம் குறையும்.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர் பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



இவர்களுக்கு குடும்ப நிலையில் மகிழ்ச்சி புரிந்துணர்வு ஏற்படும். பொருளாதாரம் பிச்சசினை தராது. காரியங்கள் யாவும் வெற்றிகரமாகவே முடியும். தேகசுகமும் நன்றாக இருக்கும். இனபந்துக்களால் உதவி உண்டு. விவாகப் பேச்சுக்கள் காலதாமதத்தின் மேல் நிறைவு பெறும். உத்தியோகத்தர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர் தொகை அதிகமாகும். தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்புகள் வலுக்கும். புதிய லாபகரமான தொழில் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் சிறப்பாக அமையும். சிலருக்கு வெளிநாடு செல்ல வசதிகள் ஏற்படும்.

### கடகம்
*(புனர் பூசம் 4 ஆம் பாதம் பூசம் ஆயிலியம்)*



கடகராசியினருக்கு குடும்ப வாழ்க்கை சீரும் சிறப்புமாக இருக்கும். எனினும் இடையிலே சிறுபிணக்குகள் தோன்றினாலும் உடனுக்குடன் நிவர்த்தியாகும். வருமானம் இருப்பினும் செலவும் கூடுதலாகவே தோன்றும். தெய்வ நம்பிக்கை நற்பலனைக் கொடுக்கும். இனத்தவர்களால் உதவி கிடைக்கும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தி யோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் கூடுதலாக இருக்கும். பதவி உயர்வுகள் தாமதமடையும். வர்த்த கர்களுக்கு வியாபாரம் மந்தநிலையைக் காட்டும். கிடைக்கும் லாபம் குறைவாகவே இருக்கும். தொழி லாளர்களின் கடின முயற்சி சிறந்த பலனைத் தரும். மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ப முன்னேற்றமுண்டு.

### சிங்கம்
*(மகம்,பூரம, உத்தரம் 1 ஆம் பாதம்)*



இவர்களுக்கு இல்லறவாழ்க்கை இனிமையாகக் கழியும். புத்திரர்களால் உதவி உண்டு. வீட்டில் சுபகருமங்கள் நடைபெற இடமுண்டு. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கல கருமங்களுக்கான பேச்சுக்கள் விரைவில் நிறைவேறும். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் விரைவில் கைகூடும். மதிப்பு, மரியாதை, உயரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். நகை வியா பாரிகள் கூடுதல் லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு ஒப்பந்த வேலைகள் கூடிய லாபத்தைத் தரும். தனித் தொழில் செய்வோரும் கூடுதல் லாபம் பெறுவர். மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றம், உயர்ச்சி கிடைக்கும் சிலருக்கு வெளிநாடு செல்ல வாய்புண்டு.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசிக்காரருக்கு இல் லறவாழ்க்கை இனிமையாக அமையும். பணவருவாய் சிறப்பாக இருக்கும். எடுத்த கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். உல்லாசப்பிரயாணங்கள், யாத்திரைகள் செல்ல வாய்ப்புக்கள் ஏற்படும். இனபந்துக்கள் நண் பர்கள் வரவால் வீடு கலகலப்பாக இருக்கும். திருமணப் பேச்சுக்களும் கைகூடி புது வாழ்வு அமையும். உத்தியோகத்தர்களுக்கு சிறப்பு வருவாய், விரும்பிய இடமாற்றம் என்பன கிடைக்கும் அதிகாரிகளும் கௌரவமாக நடந்து கொள்வார்கள். வர்த்த கர்களுக்கு பழைய முதலீடுகள் விற் பனையாகும். வங்கி உதவிகளும் உண்டு. தொழிலாளருக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேறி பரிசுகள் பெறுவர்.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு குடும்பத்தில் உட்பூசல்கள் தோன்றி மறையும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் பின் நிறைவடையும். பிரயாணங்களில் சிரமங்கள் தோன்றும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தால் நன்மைதரும். விவாகப் பேச்சுக்கள் கால தாமதமாகி பின் கைகூடும் உத்தியோத்கர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் அதிகமாகும். அதிகாரிகளுக்கு ஏற்ப தாளம் போடுதல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம்மந்த நிலை காட்டும். முயற்சி எடுத்தால் முன்னேற்றமுண்டு. தொழிலாளர்களுக்கு விசேட முன்னேற்றங்கள் காணப்படமாட்டாது. மாணவர்களுக்கு கல்வியில் ஒரே சிந்தனையைச் செலுத்தினால் முன்னேற்றமுண்டு.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசிக்காரர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் அமைதி பேணப்படும். உறவினர்களாலும் சகோதரர்களாலும் நன்மை கிடைக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும். பண வருவாய் திருப்திகரமாக அமையும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கல கருமங்கள்மனம் போல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். அதிகாரிகளின் பாராட்டுக்களையும் பெறுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓகோ என்று நடக்கும். லாபம் அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வசதி வாய்ப்புகள் கிடைக்கும் மாணவர்களுக்கு கல்வி சிறக்கும் பரீட்சைகளில்சித்தி உண்டு.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



இவர்களுக்கு குடும் அங்கத்தவர்களிடையே நல்லிணக்கமும் சந்தோசமும் ஏற்படும். புத்திரர்களாலும் இனத்தவர்களாலும் உதவி கிடைக்கும். எதிர்பாராத பொருள் வரவு ஏற்படலாம். பிரயாணங்களும் நினைத்தவாறு கைகூடும். திருமணப் பேச்சுக்கள் விரைவில் கைகூட வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு தொழில் சிறப்பு அதிகாரிகளின் பாராட்டுதல்கள் கிட்டும். ஊதிய உய ர்வு சற்றுப் பின் தள்ளும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுறுசுறுப்படையும். முயற்சிக்கேற்பலாபம் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு பல விதவசதிகள் கிட்டும். இவர்களுக்குள் ஒற்றுமை அவசியம். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் நன்று. கூடுதல் முயற்சி மேலும் சிறப்பைக் கொடுக்கும்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினர். குடும்பத்தில் அவ்வப்போது மனக் கசப்பை எதிர் கொள்ள வேண்டி இருக்கும். குடும்பச் செலவுகளும் கட்டுக்கடங்காமல் போகும். புத்திரர்களாலும் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. திருமணப் பேச்சுக்கள் கைகூடக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகரிக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பு குறையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாயிருந்தாலும், வருவாய் நன்று. இரும்பு வியாபாரம் கூடிய பலன்தரும் தொழிலாளர்களுக்குள் பிணக்குகள் இடையிடையே தலை தூக்கும். மாணவர்கள் கல்வியில் அதிகம் கவனம் செலுத்தினால் வெற்றி நிச்சயம்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூ ரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் ஜனனமானவர்களுக்கு குடும்பத்தில் பல தொல்லைகளும், செலவுகளும் அதிக மாகும். இன பந்துக்களுக்குள் மன வேறுபாடு வெறுப்பு ஏற்பட லாம். கருமங்கள தாமதத்தைக் கொடுக்கும். தேகசுகம் பாதிப்படைவதால் வைத்தியச் செலவு அதிகமாகும். குடும்பப் பெண்கள் விரக்தி மனப்பான்மையுடன் காணப்படுவர். விவாகப் பேச்சுக்கள் இழுபறி நிலையையே காட்டும். உத்தி யோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகமாகும். வேலைப்பளுவும் கூடுதலாகவே இருக்கும். வர்த்தகர்களுக்கு போட்டி பொறாமை அதிகரிக்கும். வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படலாம். தொழிலாளர்களுக்குள் பிணக்குகள் வலுக்கும். வேலைகளில் செலவு அதிகரிக்கும். மாணவர்கள் சுறு சுறுப்புடன் செயற்பட்டு தேர்ச்சி காண்பர்.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவியிடையே அந்நியோன்னிய உறவு அதிகரிக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடைபெறும். இனபந்துக்கள், நண்பர்களின் வரவால் குதூகலம் காணும். தேகசுகம் பாதிப்படையாது. குடும்ப அங்கத்தவர்கள் மகிழ்ச்சியுடன் காணப் படுவர். மங்கல கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் மதிப்பு மரியாதை கிட்டும். அதிகாரிகளின் ஒத்துழைப்பும் பெறுவர். வர்த்தகர்களுக்கு சிறப்பான வியாபாரம் நடக்கும். வங்கி உதவிகள் கிடைக்கும். நிகரலாபம் அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு செய்தொழில் சிறக்கும். மாணவர்களுக்கு ஊக்கம் அதிகரிக்கும். உயர்கல்வி கற்க வாய்ப் புண்டு.

நேர்காணல் — 'பட்டனைந்து'

# காலவோட்டத்தால் மருவி வரும் நாட்டுக் கூத்துக் கலைகள்



கி.கிறிஸ்தோப்பர்

**குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் முன்னாள் தலைவரும், சமாதான நீதிபதியும், புனித யாகப்பர் ஆலயப் பங்குப் பொருளாளருமான கலைஞர் கி.கிறிஸ்தோப்பரை சந்தித்து உரையாடியபோது...**

**கேள்வி : உங்கள் கலையுலகப் பிரவேசம் பற்றி?**

எங்களுக்கு முன்னைய கலைஞர் களான மன்னன் செபஸ்தியன் எஸ்.என்.கிறிஸ்தோஸ்திரம் விக்டர் அக்டர் ஜேம்ஸ் ஆகியோர் நடத்தி வந்த குருநகர் 'நெய்தல் வளர்பிறை நாடக மன்றத்தை' 1966 ஆம் ஆண்டு இளைஞர்களாக இருந்த செபமாலை, மாட்டீன் மனுவற்பிள்ளை நான் உட்பட பலர் இணைந்து புனரமைத்தவேளை முதல் மேடையேற்றிய 'இதயக் குமுறல்' நாடகத்தில் முக்கிய கதாபாத்திரம் ஒன்றை ஏற்று நடித்தது டன், எனது கலையுலகப் பிரவேசம் நடைபெறுகிறது.

**கேள்வி: இந்தத் துறையில் உங்கள் வழிகாட்டிகளாக யாரை குறிப்பிடுகின்றீர்கள்?**

எமது மன்றத்தின் ஆஸ்தான நாடகாசிரியர் 'மன்னன்' செபஸ்தியான் பிரான்சிஸ், மிக்கேல்பிள்ளை அண்ணாவி சாமிநாதன், அண்ணாவி கிறிஸ்தோஸ்திரம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

**கேள்வி: இதுவரை எத்தனை நாடகங்களில் நடித்துள்ளீர்கள்?**

பத்துக்கும் மேற்பட்ட சமூக நாடகங்களிலும் ஐந்துக்கும் மேற்பட்ட அரச நாடகங்களிலும், பத்துக்கும் மேற்பட்ட நாட்டுக்கூத்துக்களிலுமாக, நூற்றுக்கும் மேற்பட்ட மேடைகளிலும் தோன்றி நடித்துள்ளேன்.

**கேள்வி :உங்களுக்குப் புகழ் பெற்றுத் தந்த படைப்புக்கள்?**

சமூக நாடகங்களில் - இதயக் குமுறல், அண்ணன்காட்டிய வழி, நெஞ்சின் அலைகள், அரச நாடகங்களில் - காவியம் பிறந்தது, வள்ளல் பாரி. நாட்டுக்கூத்துக்களில் - வீரமாதேவி, புரட்சித் துறவி, தியாகராகம், மலைமேற் கொலை, போருக்குப் பின், பண்டார வன்னியன், செந்தூது ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

**கேள்வி :நாடகங்கள் மற்றும் நாட்டுக்கூத்துகளைப் பயிற்றுவித்த அனுபவம்.**

இதுதான் முடிவு, அமரதீபம், அண்ணன் காட்டிய வழி ஆகிய சமூக நாடகங்களையும், காவியம் பிறந்தது, நானே கடவுள் போன்ற அரச நாடகங்களும் போருக்குப் பின் மலைமேற்கொலை, பண்டார வன்னியன் புரட்சித் துறவி செந்தூது, நந்திவர்மன் ஆகிய நாட்டுக் கூத்துக் களையும் பயிற்றுவித்துள்ளேன்.

**கேள்வி: சமூக நாடகங்கள் என்றில்லாமல் இசை நாடகங்கள் நாட்டுக் கூத்துக்களையும் பயிற்றுவித்ததுடன் நடித்துமுள்ளதால் அவைபற்றிச் சொல்லுங்கள்?**

நீங்கள் குறிப்பிட்டதில் இசை நாடகங்களை இதுவரை தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. ஆயினும் செந்தமிழும் நாப்பழக்கம் சித்திரமும் கைப் பழக்கம் என்பது போல முயன்றால் முடியாதது எதுவு மில்லையல்லவா? சமூக நாடகங்கள் மற்றும் நாட்டுக் கூத்து வகைகள் இவற்றில் நாம் மக்களுக்குச் சொல்லும் செய்திகளை இலகுவாகவும், விரைவாகவும் செலுத்துவதற்கு சமூக நாடகங்கள் தான் பெரும்பாலும் பொருத்தமானது என்பது எனது கருத்து.

(தொடரும்...)



# புதிய பாப்பரசருக்கான ஆடை தைப்பது குறித்துச் சிக்கல்!



(வத்திக்கான்)

வத்திக்கானில் புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்கும் பணி அடுத்த வாரம் தொடங்கவுள்ள நிலையில் அவர் அணிந்து கொள்ளும் பிரத்தியேக ஆடையை எந்த அளவுக்குத் தைப்பது என்பது குறித்து சிக்கல் எழுந்துள்ளது.

பாப்பரசர் இரண்டாம் ஜோன்போல் மறைவை அடுத்து புதிய பாப்பரசருக்கான ரகசியத் தேர்தல் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. அதற்காக உலகிலுள்ள கர்தினால்கள் அனைவரும் தீவிர ஆலோசனையில் இறங்கியுள்ளனர். சென் பீற்றர்ஸ் சதுக்கத்துக்குப் பின்புறம் கொப்ளஸ் டோன் தெருவில் சிறிய தையல் கடை ஒன்று உள்ளது. பரம்பரை பரம்பரையாகப் பாப்பரசருக்கு ஆடை தைத்துக் கொடுப்பவர்கள் அந்தக் கடை உரிமையாளர்கள்தான்.

இப்போது ஐந்தாவது தலைமுறையாக ஆடை வடிவமைக்கும் பணியை பிலிப்போ காமரெல்லி என்பவர் தொடர்கிறார். இவரது முன்னோர்கள்தான் முந்தைய பாப்பரசர்கள் ஐந்து பேருக்கு ஆடைகளைத் தைத்துக்கொடுத்துள்ளனர். இப்போது புதிய பாப்பரசருக்கு ஆடை தைக்கும் பணி இவரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

பிலிப்போவுக்கு, பாப்பரசர் உடையை எந்த அளவுக்குத் தைப்பது என்பது தான் சிக்கல். புதிய பாப்பர சராக யார் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது தெரியாது. அவர் உருவ அமைப்பு எப்படி இருக்கும் என்பதும் தெரியாது. இந்தச் சிக்கலுக்கு பிலிப்போ வேறு விதமாக முடிவும் கண்டிருக்கிறார். இது குறித்து ஆடை வடிவமைப்பாளர் பிலிப்போ கூறியதாவது -

வரும் திங்கட்கிழமை புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்கும் பணி தொடங்குகிறது. அதற்கு முன் அவர் அணிய கூடிய ஆடைதயாராக இருக்க வேண்டும். தேர்தலில் யாராவது தேர்ந்தெடுக்கப்பட்டால் புதிய பாப்பரசருக்குரிய பிரத்தியேக ஆடையை அணிந்து கொண்டு அவர் சென் பீற்றர்ஸ் பல்கனியில் வந்து தோன்றுவார். அப்போதுதான் இந்த உலகத்துக்குப் புதிய பாப்பரசர் யார் என்பது தெரியும்.

அதற்கு முன் அவர் உருவ அமைப்பு தெரியாது. மூன்று விதமான அளவுகளில் ஆடைகள் தைத்துள்ளோம். சிறியது, நடுத்தரம், பெரியது என்ற அளவுக்கு புதிய பாப்பரசருக்கான ஆடைகளைத் தைத்து வத்திக்கானுக்குக் கொடுத்திருக்கிறோம். புதிய பாப்பரசர் உருவத்துக்கு ஏற்றதான ஆடையை அணிந்து கொள்ள வசதியாக அப்படித் தைத்திருக்கிறோம். அதிலும் திருத்தங்கள் இருந்தால் கன்னியாஸ்திரிகள் தற்காலிகமாக சில மாற்றங்களைச் செய்வர். பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்பட்ட மறுநாள் மீண்டும் நாங்கள் சென் பீற்றர்ஸ் சதுக்கத்துக்குச் சென்று ஆடையைச் சரியான அளவுக்குத் தைத்துக் கொடுப்போம் என்று பிலிப்போ கூறினார்.

பிலிப்போவின் கடையில் தற்போது விற்பனை சூடுபிடித்துள்ளது. உலக கர்தினால்கள் அனைவரும் வத்திக்கானில் கூடியிருப்பதால் பிலிப்போவின் கடையில் கொள்வனவு செய்து வருகின்றனர். இவ்வளவு புகழ்பெற்ற கடைகடந்த 1798 ஆம் ஆண்டு தொடங்கி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.




## உதவித் திட்டப் பணிப்பாளர் பதவி வெற்றிடம்

அரசியல் அமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் கருத்திட்டத்திற்கு அமைய உதவித் திட்டப் பணிப்பாளர் பதவிக்குக் கீழ்வரும் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்க முடியும்.

கல்வித் தகைமையாக : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சம்பந்தப்பட்ட துறையில் பட்டம் பெற்று இருப்பதுடன் முகாமைத்துவத் துறையில் குறைந்தது மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். சட்டத்துறையைப் பின்னணியாகக் கொண்ட விண்ணப்பதாரர்கள் பற்றி விசேடமாகக் கருத்திற்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருப்பதுடன் விண்ணப்பத்தின் கடித உறையின் இடதுபக்க மேற்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும். அடிப்படைத் தகுதி கொண்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

எதிர்வரும் 2005.04.28 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்போ கிடைக்கக்கூடியவாறு - செயலாளர், அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, இல. 310 காலி வீதி, கொழும்பு - 03 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## கடல் சுற்றாடல் உதவியாளர்

சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சு கடல் மாசடைதல் தடுப்பு அதிகாரசபையில் கடற் சுற்றாடல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கல்வித் தகைமையாக : சூழலியல், உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் அல்லது நீதித்துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்று இருத்தல் வேண்டும்.

வயதெல்லை 18 வயதுக்கு உட்படாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருப்பதுடன், தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் கடற் சுற்றாடல் உதவியாளர் என பதவி நிலை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.

விண்ணப்பங்களை 2005.04.29 ஆம் திகதியன்றோ அதற்கு முன்போ கிடைக்கக்கூடியவாறு - தலைவர், கடல் மாசடைதல் தடுப்பு அதிகார சபை, இல. 758, 2 ஆம் மாடி, பேஸ்லைன் வீதி, கொழும்பு - 09 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

## அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, தகவல் தொழில்நுட்ப உதவியாளருக்கான பதவி

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி இந்துசமய அலுவலகள் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சி உதவும் அமைச்சின் பதவிகளுக்குத் தொழிலற்ற மற்றும் குறைநிலைத் தொழில் புரியும் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அபிவிருத்தி உதவியாளர் பதவிகளின் எண்ணிக்கை - 14, கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொண்ட பட்டம்.

தொழிற்பயிற்சி அபிவிருத்தி உதவியாளர் பதவிகளின் எண்ணிக்கை 52, கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட பட்டம்.

தகவல் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி உதவியாளர் பதவிகளின் எண்ணிக்கை 22, கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பெற்றுக்கொண்ட விஞ்ஞானமானி, கணினி பொறியியல் அல்லது இவற்றிற்குச் சமனான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ் பாடசாலைகளில் அபிவிருத்தி உதவியாளர் பதவிகளின் எண்ணிக்கை - 17, கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கட்டட அபிவிருத்தி உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை - 01, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருப்பதுடன் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2005.04.28 ஆம் திகதியன்றோ அதற்கு முன்போ கிடைக்கக் கூடியவாறு, பதிவுத் தபாலில் -

செயலாளர், கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் மற்றும் கல்வி வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு, இலக்கம் - 64, காலி வீதி, கொழும்பு - 03 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

# ஜேர்மன் கர்தினாலுக்கு பாப்பரசராகும் வாய்ப்பு!

## ஆதரவு பெருகுகிறது

(வத்திக்கான்)

ஜேர்மனி கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் புதிய பாப்பரசராகத் தெரிய வாய்ப்பு அதிகரித்து இருப்பதாகக் கூறப்படுகின்றது.

பாப்பரசராக இருந்த 2 ஆம் ஜோன்போல் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். உலகம் முழுவதிலுமிருந்து வத்திக்கான் நகரில் கூடியுள்ள கர்தினால்கள் புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்கவிருக்கிறார்கள். இது தொடர்பாக அவர்கள் அவ்வப்போது கூடி சாதாரண முறையில் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

புதிய பாப்பரசர் தேர்தல் வருகிற 18 ஆம் திகதி தொடங்குகிறது. 117 கர்தினால்கள் வாக்களித்து புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுப்பார்கள்.

பாப்பரசர் தேர்தல் போட்டியில் ஜேர்மனி நாட்டைச்சேர்ந்த கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் முன்னணியில் இருக்கிறார். அவர் பாப்பரசராக ஆதரவு பெருகிவருவதாக இத்தாலியப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ரட்சிங்கருக்கு ஆதரவு பெருகி வருவதற்கு அவர் மறைந்த பாப்பரசருக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர் என்பதும் ஒரு காரணமாக கூறப்படுகிறது.

# இரட்டை கார்க்குண்டு தாக்குதலில் பாக்தாத்தில் 18 பேர் உயிரிழப்பு!

(பாக்தாத்)




ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று இடம்பெற்ற இரட்டைக் கார்க் குண்டுத் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர்.

மத்திய பாக்தாத்திலுள்ள உள்துறை அமைச்சின் அலுவலகத்திற்கு அருகில் - போக்குவரத்து நெருக்கடி மிகுந்த வீதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பொலிஸார் மற்றும் சிறுவர்களும் உயிரிழந்ததாகச் சம்பவத்தை நேரில்கண்டவர்கள் தெரிவித்தனர்.

ஏழு பொலிஸ் வாகனங்கள் கொண்ட தொடரணிக்கு இடையில் தற்கொலைக் குண்டு தாரிகள் தமது கார்களுடன் உட்புகுந்தே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரியவருகிறது.

சம்பவம் நடைபெற்ற பகுதியிலேயே பாக்தாத் பல்கலைக்கழகம், அவுஸ்ரேலியத் தூதரகம் என்பனவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதத்துக்கு எதிரான போர்; முஷாரப்புடன் ரம்ஸ்பீல்ட் பேச்சு!

(இஸ்லாமாபாத்)



அமெரிக்க பாதுகாப்பு செயலர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட், பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்புடன் - தெற்கு வஸிரிஸ்தான் மாகாணத்தில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்வது குறித்துப் பேச்சு நடத்தினார்.

ஆசியாவுக்கான தனது விஜயத்தில் ஒரு கட்டமாக, பாகிஸ்தானுக்குச் சென்ற அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் -

பாகிஸ்தானில் வஸிரிஸ்தான் மாகாணத்தில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களிலேயே வஸிரிஸ்தானில் இயங்கும் அல் - கொய்டா மற்றும் உள்ளூர் ஆயுதக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது குறித்தே விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த வருடம் இந்த மாகாணத்தில் தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் படைகள் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த பின்னர் பலத்த இழப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன.

அரேபிய, உஸ்பெக், மற்றும் வெளிநாட்டு ஆயுதக் குழுக்களின் ஊடுருவல்கள் இங்கு அதிகமாக இருப்பதால் - பாதுகாப்புப் படைகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின் றன.

ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் முன்னதாக ஆப்கானிஸ்தானுக்கும் விஜயத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
கமலஹாசன்,
மனிசா கொய்ராலா
நடித்த
மும்பை xபிரஸ்
(சி-3980)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
சித்திரைப் புத்தாண்டு வெளியீடாக
இளைய தளபதி விஜய்,
போய்ஸ் புகழ் ஹரிணி.
காட்சி நேரம் : (பு.நே)
10.30, 2.30,
6.30, 9.30
விசேட காட்சிகளும் உண்டு
சச்சின்
ரிக்கெட் முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
தினசரி 5 காட்சிகள் (பு.நே.)
11.00, 3.00,7.00
இரவு விசேட காட்சியாக
10.00, இரவு 1.30
புதுவருட பிரமாண்ட வெளியீடு
சுப்பஸ்ரார்
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு,
ஜோதிகா, வடிவேல், நாசர்
நடிப்பில்
சிவாஜி புரொடெக்ஷனின்
சந்திரமுகி
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
(C/3979)



சிறுவிளம்பரம்
SPOKEN ENGLISH
ஓய்வு பெற்ற உத்தியோகத்தரால் வீடுகளுக்கு வந்து சுலபமான முறையில் விரைவாக ஆங்கிலம் பேசக் கற்றுக் கொடுக்கப்படும்.
தொடர்பு - இல.06, மாவத்தை ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். T.P - 4591001 (1126)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# காவலரணை நோக்கி புலிகள் தாக்கவில்லை!

## எழிலன் தெரிவிப்பு

(திருகோணமலை)

மூதூர் மகிந்தபுர இராணுவ காவலரண்களை நோக்கி புலிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகப் படைத்தரப்பு கூறிய குற்றச்சாட்டைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

திருமலை - மகிந்தபுர இரா்ணுவச் சோதனைச் சாவடியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவிக்கையில் -

நேற்றுமுன்தினம் மாலை 7.30 மணியளவில் புலிகளின் ஈச்சலம்பற்று சோதனைச் சாவடியில் இருந்து இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது 25 இற்கு மேற்பட்ட வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இந்தத் தோட்டாக்கள் இராணுவச் சோதனைச் சாவடிக்கு மேலாகச் சென்றதால் எந்தவித சேதமும் ஏற்படவில்லை. இது ஒரு போர் நிறுத்த மீறலாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில் -

நேற்றுக்காலை 10 மணியளவில் மகிந்தபுர பகுதியில் இருந்து - எமது காவலரணுக்கும், மகிந்தபுர இராணுவச் சாவடிக்குமிடையிலுள்ள சூனியப் பிரதேசத்தில் ஆயுதங்களுடன் சிலர் ஊடுருவி இருப்பதாக அந்தப் பகுதியில் நடமாடிய பொதுமக்கள் தெரிவித்தனர். இதையடுத்து எமது காவலரணில் இருந்து எங்கள் போராளிகள் அந்தப் பகுதியில் துப்பரவுப் பணியில் ஈடுபட்டார்கள். அந்த நடவடிக்கையின்போது எமது போராளிகள் எங்களுடைய பகுதிகளில் நின்று வேட்டுக்களைத் தீர்த்து துப்புரவு செய்தார்கள்.

ஏனென்றால் அந்த சூனியப் பிரதேசங்களுக்குள் ஆயுதங்களுடன் செல்ல முடியாது என்பதால் எங்கள் பகுதிகளில் நின்று அந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

ஆனால், அந்தப் பகுதிகளில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட போது மகிந்தபுர இராணுவச் சாவடிகளில் உள்ள இராணுவத்தினருக்கு அந்தச் சத்தம் கேட்டிருக்கலாம். ஆனால் அங்கு நாங்கள் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை. எங்கள் பிரதேசத்தில் இருந்து தொடராகக் காட்டுப் பகுதி இருக்கிறது. எனவே அந்தக் காடு எல்லாவற்றையும் தாண்டி, இந்த ரவைகள் போவது என்பது முடியாத காரியம் எனத் தெரிவித்தார்.

(10,04)

# சுனாமி புனரமைப்பு நடவடிக்கைக்கு அவசர காலச் சட்டம் தேவையில்லை!

## சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அவசரகால சட்டம் தேவையில்லை என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று காலிப்பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்ட சோமவன்ச அமர சிங்க, அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

நாட்டை மீண்டும் கட்டி யெழுப்பும் திட்டத்தை சாதாரண சட்டத்தால் செய்யமுடியும். எந்த செயற்திட்டத்தை செய்ய முடியாது என எமக்கு காட்டுங்கள். உண்மையில் அவசரகாலச் சட்டம் தேவையில்லை.

அவசர காலச்சட்டம் இந்த நாட்டின் வரலாற்றில் தவறாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவசரகாலச்சட்டம் இந்த நாட்டில் நல்ல செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்து வதைவிட தீய செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தவே பயன்பட்டிருக்கிறது.

இலங்கையில் சில குறைபாடுகள் இருக்கின்றன அவற்றை அரசாங்கம் ஏற்று கொள்கின்றது. அரசாங்கத்தின் பங்காளி என்ற வகையிலும், பொறுப்பு வாய்ந்த கட்சி என்ற வகையிலும் அவசரகால சட்டம் தேவையில்லை என்ற கருத்தை நாம் ஏற்றுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொருளாதார வளர்ச்சி பெருமளவில் பாதிப்பு!

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் குறைவாகவே இருக்கும் என்றும், 6 வீதம் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 5.25 வீத அதிகரித்து பதிவாகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் பாரிய பொருளாதார அழிவினை ஏற்படுத்திய சுனாமியின் தாக்கம் காரணமாகவே இந்த வீழ்ச்சி நிலை ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகின்ற போதிலும், சுனாமியின் பின்னர் இலங்கைக்கு பெருமளவு உதவிகள் கிடைத்திருப்பதாகவும் இவை ஏற்கனவே கணிப்பிடப்படாத உதவிகள் என்பதால் பொருளாதார வீழ்ச்சிக்கு சுனாமித் தாக்கத்தை காரணமாக கருத முடியாது என பொருளாதார வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசின் நிலையற்ற தன்மை, சமாதான முயற்சிகளில் தொடர்ந்து காணப்படும் முட்டுக்கட்டை, மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படலாம் என்ற அச்சம் என்பவை காரணமாக வெளி நாட்டு முதலீடுகள் குறைவடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (01)

### இராணுவஉதவி வழங்கியதற்கு

# வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் பாகிஸ்தானுக்கு நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு நெருக்கடி ஏற்பட்ட தருணத்தில் பாகிஸ்தான் வழங்கிய இராணுவ ஒத்துழைப்புகளுக்கு இலங்கை அரசாங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு கல்லூரியைச் சேர்ந்த 17 படை அதிகாரிகளைச் சந்தித்து பேசிய போதே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நன்றியை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தேசிய் பாதுகாப்பு கல்லூரியானது இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு தொடர்ச்சி யாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வரும் பயிற்சிகளுக்கும் கதிர்காமர் நன்றி தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டை மீட்கும் யுத்த நடவடிக்கை ஒன்றை விடுதலைப்புலிகள் ஆரம்பித்து அதில் கணிசமான வெற்றிகளை பெற்று வந்த வேளை பாகிஸ்தான் மிகப்பெரிய இராணுவ உதவியை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அந்த காலப்பகுதியில் பல் குழல் எறிகணைச் செலுத்திகளை வழங்கி விடுதலைப்புலிகளின் தாக்குதலை முறியடிக்க உதவிய பாகிஸ்தானின் ஒத்துழைப்பை நினைவு கூர்வதாகவும் கதிர்காமர் தெரிவித்துள்ளார். (01)

### இலங்கைக்கு...

வீதமாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், சுனாமியால் இந்த வளர்ச்சிவீதம் 5.25 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகவும் நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

### பொலிஸாரின்..

ளிரவு வரை அந்தப் பகுதியில் பதற்றம் நிலவி யது.

பொதுமக்களின் தாக்குதலில் இரண்டு பொலிஸார் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பவுசர் சாரதியான பொலிஸ் சார்ஜன்ட் மது போதையில் வாகனத்தைச் செலுத்தியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் - இவரும் ஊர் காவற்படை சிப்பாய் ஒருவரும் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### இலங்கை சமாதான முன்னெடுப்பு...

கப்பட்ட பங்கையே வகித்துவந்தது. அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவும், நிதியுதவிகளையும், சமஷ்டி தொடர்பாக ஆலோசனைகளை மட்டுமே கனடா வழங்கிவருகிறது.

சர்வதேச ரீதியில் சமாதானத்தை நிலைநாட்ட முற்படும் ஒரு நாடு என்ற வகையில் - இலங்கையின் சமாதான முயற்சிகளில் கூடிய பங்களிப்பைச் செலுத்தவேண்டும் என்ற கடப்பாட்டைக் கனடா கொண்டிருக்கிறது.

ஆனால், இந்த சமாதான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பைத் தடைசெய்ய வேண்டுமென்று கனடாவில் ஒருதரப்பினர் கோரிவருவது - இலங்கை சமாதான முயற்சிகளில் கனடா தலையிடுவதற்குத் தடங்கலாக இருந்து வருகிறது.

தமது அரசியல் அபிலாஷைகளுக்கு அப்பால் - இலங்கை சமாதான முயற்சிகளில் இருதரப்பையும் இணக்கத்துக்குக் கொண்டுவரும் செயற்பாட்டில் ஈடுபடவேண்டிய கடப்பாடு கனடிய அரசியல்வாதிகளுக்கு உள்ளது.

கனடிய வெளிவிவகார அமைச்சர் மிக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளார். இந்த விஜயத்துக்கான திகதியோ, நிகழ்ச்சி நிரலோ இதுவரை தயாரிக்கப்படவில்லை.

ஆனால் - இலங்கையில் சகல பகுதிகளுக்கும் சென்று நிலைமையை அவதானிக்கும் வகையில் அவரது விஜயம் அமையும் என்றும் வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### உயர்தரப்..

ளது. இதற்கமைய ஜூன் 6 ஆம் திகதி முதல் ஜலை முதலாம் திகதி வரை இந்தப் பரீட்சை நடைபெறும் என்றும் பரீட் சைத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### சமாதான..

இலங்கைக்கு வரும் கிறிஸ்ரீனா றொக்காவுக்கும் எதிர்வரும் 18 திகதி இலங்கை வரும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் இராஜாங்க செயலாளராக கொண்ட லீசாரயிஸ் பதவியேற்றதன்பின்னர் இலங்கைவரும் உயர்மட்ட அமெரிக்க இராஜதந்திரி கிரிஸ்ரீனா றொக்கா என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# நிவாரண உதவிகள் குறித்து கண்காணிப்பு பணி ஆரம்பம்!

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் பாகுபாடின்றி மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை ஆராயும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் தற்போது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளதாகவும், இங்கு இடைத்தங்கல் முகாம்களில் தங்கி யுள்ள மக்களின் நிலை குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சரவணப்பெருமான் (பாப்பா)

(மின்சாரப் பகுதி சீரோனர், காரைநகர், குருநகர்)

காரைநகர் களபூமி பாணவோடை அம்பிலாலையைப் பிறப்பிடமாகவும், இல 17/2 ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணையை தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை - சரவணப்பெருமான் (பாப்பா) 14.04.2005 அன்று (வியாழன்) காலை காலமானார்.

அன்னார் காலம்சென்ற வேலுப்பிள்ளை சிவகாமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், வேலுப்பிள்ளை செல்லம்மாவின் பெறாமகனும், காலஞ்சென்ற பொன்னையா அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பரணீதரனின் (யா/இந்துக் கல்லூரி 11ம் ஆண்டு) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (வைத்திய திணைக்களம் கிளிநொச்சி) மகாதேவா - பொன்னம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாதேவா, சிவநாயகி, சிவபாலன், பாலேந்திரன், புவனேஸ்வரி, ராஜேஸ்வரி, இராசமலர், சறோஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேவகி, வத்ஸலா, காந்தன், பேந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 17/2 ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணையிலுள்ள இல்லத்தில் இன்று (15.04.2005 வெள்ளி) 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/2 ஐயனார் கோவில் வீதி,
வண்ணார் பண்ணை

(1128)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## சதாசிவம் இலட்சுமி

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், நெல்லியடியை வசிப்பிடமாகவும்கொண்ட சதாசிவம் இலட்சுமி காலமானார். அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி விசாலாட்சியின் அன்புமகளும், காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அச்செலிங்கம், இராஜா, அருளம்மா மற்றும் அப்புத்துரையின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற செல்லத்துரையின் மைத்துனியும், பூமணி, தர்மகுலசிங்கம், கிருஷ்ணகுமாரி, கிருஷ்ணவேணி, குருபரன் ஆகியேரின் சிறியதாயாரும், சச்சிதானந்தம் (பிரான்ஸ்), செல்வராணி, சிவானந்தம், நித்தியானந்தம் (பிரான்ஸ்), சதானந்தம் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நடேசு, ரூபவதி, ஞானபியாட்றிஸ் (பிரான்ஸ்), ரவிந்திரம், தயாளினி, விஜிதா மேரி (இந்தியா), ஆகியோரின் மாமி யாரும், தமிழிதன், எழிலிதன், விழிவிதன், வித்தியா, நிஷாந்தி, சிந்துஜா, சிவாஜினி, சிவசங்கர், சிவதர்சினி, பிரசாந், குணநேசன் (பிரான்ஸ்), சிவநேசன், சந்திரவதனி, கிரிகுலன், பத்மபிரியா, ஜோசப்பிரியா, சிறிப்பிரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் புதவுடல் தகனக்கிரிகைக்காக ஆலங்கட்டை மயானத் திற்கு 15.04.2005 அன்று வெள்ளிக்கிழமை 12.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

காளிகோவிலடி
நெல்லியடி

தகவல்
குடும்பத்தினர்

நாளை ஆரம்பம்
A/L - 2007
கலை, வர்த்தகப் பிரிவுகள்
காலை 9 மணி
DMI
யாழ்.நகர்

D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி - இந்து குருகுலம் முன்பாக)
A/L - 2007 பிரிவு 02
கலை வர்த்தகம்
ஆரம்பம்:
16 ஏப்ரல் 2005 - சனி காலை 7.00 மணி
D.C.M.

சமய சந்தர்ப்பங்கள் எப்போதும் கிட்டுவதில்லை
UNIT
விபரம் 2 ஆம் பக்கம் பார்க்கவும்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ/த) பரீட்சை - 2005

## பகுதி I

# கணக்கீடு

ஆசிரியர் : D.சாம்

(தொடர்ச்சி) 2.

(அ) (i) பின்வரும் அட்டவணையில் உள்ள நடவடிக்கையின் சரியான இடத்தை சரி ( √) அடையாளம் மூலம் பூர்த்தி செய்க.

| | | இலாபநட்டக் கூற்று | | ஐந்தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | | வருமானம் | செலவு | சொத்து | பொறுப்பு | உரிமை |
| 1. | பெற்ற வட்டி வருமானம் | | | | | |
| 2. | கடன்கொடுத்தோர் | | | | | |
| 3. | கூலி | | | | | |
| 4. | கையிருப்பு | | | | | |
| 5. | மூலதனம் | | | | | |
| 6. | செலுத்திய வாடகை | | | | | |
| 7. | செலுத்த வேண்டிய கடன் | | | | | |
| 8. | கட்டண வருமானம் | | | | | |
| 9. | விளம்பரம் | | | | | |
| 10 | வங்கி மேலதிகப்பற்று | | | | | |
| 11 | கடன்பட்டோர் | | | | | |
| 12 | பாவித்த பொருட்கள் | | | | | |

(ஆ) கஜன் நிறுவனத்தின் 2000, 2001 டிசம்பர் 31 இல் கையிருப்பில் ஏற்பட்ட தவறுகள் இரண்டு வருட முடிவுக்கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின் தெரிய வந்தது.
மேற்கூறிய தவறின் விளைவாக கீழே தரப்பட்ட ஒவ்வொரு விடயமும் குறைவாகக் காட்டப்பட்டுள்ளதா? (-) அல்லது மிகையாகக் காட்டப்பட்டுள்ளதா? (+) அல்லது மாற்றம எதுவும் இல்லையா? (0)
(அ. உதாரணத்தைக் கவனிக்கவும்) என்பதைக் குறிப்பிடுமாறு நீர் வேண்டப்படுகின்றீர்.

| | நடைமுறைச் சொத்துக்கள் ரூபா | | விற்ற சரக்கின் கிரயம் ரூபா | | தேறிய இலாபம் ரூபா | | உரிமையாளர் மூலதனம் ரூபா | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பிழை | 2000 | 2001 | 2000 | 2001 | 2000 | 2001 | 2000 | 2001 |
| அ.2000 ஆம் ஆண்டிறுதியிருப்பு கூட்டிமதிப்பிடப்பட்டது | + | 0 | - | + | + | - | + | 0 |
| ஆ.2000ஆம் ஆண்டு ஆரம்பவிருப்பு குறைத்து மதிப்பிடப்பட்டது | | | | | | | | |
| இ.2000 ஆம் ஆண்டு கொள்வனவு இரண்டு முறை பதியப்பட்டது | | | | | | | | |
| ஈ.2000 ஆம் ஆண்டிறுதியிருப்பு குறைத்து மதிப்பிடப்பட்டது | | | | | | | | |
| உ. 2001ஆம்ஆண்டுஆரம்பவிருப்பு கூட்டி மதிப்பிடப்பட்டது | | | | | | | | |
| ஊ.2000 ஆம் ஆண்டு கொள்வனவுத் திரும்பல் இரண்டு முறை | | | | | | | | |
| எ. 2000ஆம்ஆண்டு ஆரம்பவிருப்பு | | | | | | | | |
| ஏ. 2001 ஆம் ஆண்டிறுதியிருப்பு | | | | | | | | |

(இ) ஜோன்சன் கம்பனி பின்வரும் முதற்பதிவேடுகளைப் பயன்படுத்துகின்றது:
கொள்வனவு நாளேடு (கொ/நா)
விற்பனை நாளேடு (வி/நா)
காசுப் பெறுவனவு நாளேடு (கா/பெ/நா)
காசுக் கொடுப்பனவு நாளேடு (கா/கொ/நா)
பொது நாளேடு (பொ/நா)
பின்வரும் ஒவ்வொரு நடவடிக்கைக்குமான நாளேட்டைக் குறிப்பிடுக. ( வினாவின் இலக்கத்தை எழுதி நாளேட்டின் சுருக்கத்தை எழுதுவது போதுமானது. )

(i) ரூபா 6 200 கிரயமான பொருட்கள் பசில் கம்பனிக்கு ரூபா 10 000 விற்கப்பட்டன. ________
(ii) பீ.எஸ்.ஜேன்சன் மேலும் ரூபா 8 000 தை நிறுவனத்தில் இட்டார் ________
(iii) பற்றிக் கம்பனியிடமிருந்து ரூபா 14 000 காசிற்கு கையிருப்பு வாங்கப்பட்டது. ________
(iv) றொபேட் கம்பனிக்கு பொருட்கள் விற்றது தொடர்பாக ரூபா 6 000 காசும், பாவித்த பிரதி செய்யும் இயந்திரமும், 60 நாள் 12% வருமதி உண்டியலும் கிடைத்தது. ________
(v) ரூபா 12 000 கிரயமான பண்டங்கள் றேஜிக் கம்பனிக்கு ரூபா 17 000 இற்கு விற்கப்பட்டது. ________
(vi) ரூபா 4 000 பெறுமதியான அலுவலகப் பொருட்கள் கடனுக்கு வாங்கப்பட்டது. ________
(vii) 60 நாட்களில் பணம் செலுத்தப்படும் என்ற அடிப்படையில் விநியோகித்தோரிடம் பொருட்கள் வாங்கப்பட்டது. ________
(viii) முகாமைத் தீர்மானப்படி காசுக்கழிவு வழங்கப்பட்டது. ________
(ix) வருட முடிவில் செய்கைப்பட்டியல் தயாரித்து முடித்தபின் செம்மையாக்கப் பதிவு மேற்கொள்ளப்படல். ________
(x) வருடமுடிவில் கடைசிக்கட்ட நடைவடிக்கையாக முடிவுப்பதிவுகள் தயாரிக்கப்பட்டது. ________

(ஈ) றேமன் தனது குறிப்பேட்டுப் பதிவுகளில் விளம்பலை உள்ளடக்காத முறையிலே கணக்குப் புத்தகம் பேணும் ஒரு கணக்குப் பதிவாளரைச் சேவையில் வைத்துள்ளார். பின்வருவன ஒவ்வொன்றும் எழக்கூடிய சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக விளக்குக.

| | | வரவு ரூபா | செலவு ரூபா |
|---|---|---|---|
| (i) | எழுது கருவிகள் கணக்கு | 800 | |
| | தொலைபேசிக் கணக்கு | | 800 |
| (ii) | இலாப நட்டக் கணக்கு | 5 000 | |
| | சொத்து முடிபுசெய்தல் கணக்கு | | 5 000 |
| (iii) | காசுக் கணக்கு | 800 | |
| | அறவிடமுடியாக் கடன் கணக்கு | 2 700 | |
| | காந்தி கணக்கு | | 3 600 |
| (iv) | ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு | 2 400 | |
| | ஐயக்கடன் கணக்கு | | 2 400 |

(உ) (i) கணக்கீட்டுத் தத்துவங்கள் (Accounting Principles) என்றால் என்ன?
(ii) 2001 ஜுலை 31 இல் உள்ளவாறு உற்பத்தியாளர் ஸ்தாபனமொன்று சம்மந்தமாகப் பின்வரும் தகவல்கள் கிடைக்கின்றன.
(1) வியாபாரத்தின் மொத்தச் சொத்துக்களின் தொகை ரூபா 300, 000 ஆகும்.
(2) வியாபார நிலையம் கப்பல்துறை முகத்திற்கு சுமார் 200 கிலோ மீற்றர் வடக்கே அமைந்துள்ளது.
(3) வியாபாரத்தின் பொறுப்புக்கள் ரூபா 25 000
(4) இந்த வியாபாரத்தின் முகாமையாளர் 63 வயதானவர்.

**வேண்டப்படுவது:**
கணக்கீட்டுத் தகவல் என்றால் என்ன? மேலே தரப்பட்டவையில் எவை கணக்கீட்டுத் தகவல்கள்.

1. (அ) நிதிக்கூற்றுக்களின் சிறப்பம்சங்கள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.
(ஆ) பின்வருவனவற்றினால் மீறப்பட்டுள்ள எண்ணக்கருக்கள் யாது?
(i) காசாக செய்த செலவுகளை மட்டும் முடிவுக் கணக்குகளில் காட்டியது.
(ii) இருப்பை சென்ற ஆண்டு முதல் வந்தது முதல் வெளியே முறையிலும் ,நிகழாண்டு கடைசியாக வந்தது முதல் வெளியே முறையிலும் , எதிராண்டு நிறையிட்ட சராசா முறையிலும் கணிப்பிட முடிவு செய்துள்ளமை.
(iii) ஆண்டறிக்கையில் காசுப் பாய்ச்சற் கூற்று இணைக்காமை.

(இ) பின்வருவன மூலதனச் செலவீனமா, பிற்போட்ட செலவீனமா, வருமானச் செலவீனமா, வருமானமா எனக் குறிப்பிடுக.
(i) சொத்தை மறுமதிப்பீடு செய்வதன் மூலம் கிடைக்கும் மேலதிகப் பெறுமதி.
(ii) பொறியை வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் பணம்.
(iii) முதலீட்டுக்கு கிடைக்கும் பங்கிலாபம்.
(iv) சொத்தைப் பராமரிப்பதில் செய்யப்படும் கொடுப்பனவுகள்.
(v) காணியை துண்டுகளாக்கி மறுபடியும் விற்பதற்காக கொள்வனவு செய்தல்.
(vi) காணியைக் கொள்வனவு செய்வதற்காகக் கொடுத்த சட்டக்கட்டணம்
(vii) கொள்வனவு செய்த நிலையான சொத்தைக் கொண்டு வருவதற்காக கொடுத்த காசு.
(viii) காணியைப் பராமரிக்கக் கொடுத்த காசு.
(ix) தொழிற்சாலையில் உள்ள பொறியில் பொருத்தப்பட்டிருந்த சங்கிலி கழன்றமையால், அதனை மறுபடியும் பொருத்துவதற்குச் செலவிடப்பட்ட பணம்.
(x) விளம்பரத்திற்கும் சந்தைப்படுத்தல் ஆய்விற்குமாக ஏற்பட்ட செலவினம்.

(ஈ) ஜில்லா நிறுவனம் 31 டிசம்பரில் நிதியாண்டை முடிக்கும். கடன்பட்டோர் விபரம் பின்வருமாறு. (அனைத்தும் 30 நாட்களுக்குள் பணம் செலுத்த வேண்டும். )

| கடன்பட்டோர் | விற்பனைத் திகதி | தொகை ரூபா |
|---|---|---|
| பி.ஜேவர்த்தன | ஜுலை 20 | 800 |
| ஏம்.இராஜபட்ஷ | செப்ரெம்பர் 10 | 560 |
| ஜே.தளுவத்தை | நவம்பர் 23 | 2 100 |
| எஸ்.மார்க் | மே 18 | 1 600 |
| ஆர்.மொவீன் | ஓட்ரோபர் 17 | 2 600 |
| கே.நசீர் | ஓகஸ்ட் 9 | 200 |
| ஏம்.பார்த்தீபன் | டிசம்பர் 8 | 400 |
| ஈ.வரதன் | ஓட்ரோபர் 2 | 1 860 |

**வேண்டப்படுவது:**
பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க. (அனைத்து மாதங்களும் 30 நாட்களைக் கொண்டது எனக் கொண்டு)

| வாடிக்கையாளர் | மீதி | உடன் கடன் | ஐயக்காலம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1-30 | 31-60 | 61-90 | 91-180 | 180 இற்கு மேல் |
| | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |
| ஐயக்கடன் வீதம் | | 1% | 5% | 10% | 20% | 30% | 60% |
| ஐயக்கடன் ஏற்பாடு | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| மொத்த ஐயக்கடன் ஏற்பாடு = ________ | | | | | | | |

(உ) கீழ்வரும் கணக்குகள் 31 டிசம்பரில் றஜனி நிறுவனத்தில் காணப்பட்டது.

முற்பணக்காப்புறுதி

| ரூபா | |
|---|---|
| 31.12 மீதி 3 540 | |

காப்புறுதிச் செலவு

| ரூபா | |
|---|---|
| 31.12 மீதி 0 | |

வருமதி வட்டி வருமானம்

| ரூபா | |
|---|---|
| 31.12 மீதி 0 | |

வட்டி வருமானம்

| | ரூபா |
|---|---|
| | 31.12 மீதி 8 400 |

கூலிச் சென்மதி

| | ரூபா |
|---|---|
| | 31.12 மீதி 0 |

கூலிச் செலவு

| ரூபா | |
|---|---|
| 31.12 மீதி155 600 | |

**வேண்டப்படுவது:**
பின்வரும் தகவல்களை மேற்தரப்பட்ட கணக்குகளில் பதிக.
1. இவ்வருட காப்புறுதிச் செலவு ரூபா 1 240
2. இவ்வருடம் செலுத்தப்படாத கூலிச் செலவு ரூபா 1 360
3. இவ்வருட வருமதி வட்டி வருமானம் ரூபா 580

4. (அ) கமகே நிறுவனம் சீமேந்தை உற்பத்தி செய்கின்றது. இந் நிறுவனத்தின் 30 ஜுன் 2001 இல் முடிவடைந்த 6 மாதத் தகவல்கள் வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| கொள்வனவு- மூலப்பொருள் | | 60 000 |
| நேர்க் கூலி | | 50 000 |
| வாடகை இறை காப்புறுதி-உற்பத்திமேந்தலை | | 20 000 |
| கொண்டு வரும் செலவு | | 720 |
| கையிருப்பு- | 30 ஜுன் 2001 | |
| மூலப்பொருள் | | 11 120 |
| முடிவுப்பொருள் (2 000 தொன்) | | 16 000 |
| புத்துருவாகும் வேலை- | | |
| | 1 ஜனவரி 2001 | 8 000 |
| | 30 ஜுன் 2001 | 2 400 |
| கையிருப்பு- | 1 ஜனவரி 2001 | |
| மூலப்பொருள் | | 11 120 |
| முடிவுப்பொருள் (1 000 தொன்) | | 8 000 |
| தொழிற்சாலை மேற்பார்வைக் கிரயம் | | 4 000 |
| விற்பனை- முடிவுப்பொருள் | | 150 000 |

விளம்பரச் செலவு ஒரு தொன்னுக்கு 25 சதம் ஆகும். இவ்வாறு மாதத்தில் 16 000 தொன் உற்பத்தி செய்யப்பட்டது.

வேண்டப்படுவது:
(i). பயன்படுத்தப்பட்ட மூலப்பொருளைக் கணித்தல்.
(ii) மொத்த உற்பத்தி கிரயத்தைக் கணித்தல்.
(iii) இக்காலப் பகுதியில் விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட செலவுகளின் மொத்தம்.
(iv) இக்காலத்திற்கான தேறிய இலாபம்.

(ஆ) சிறுகுறிப்பெழுதுக.
(1) காசு
(2) காசுச் சமனானவை
(3) கொள்வனவு
(4) கிரயம்
(5) புத்துருவாகும் வேலை
(6) செலவு
(7) பற்று

5. (அ) இருப்புக்கள் - இலங்கை கணக்கீட்டு நியமம் 5 இற்கு அமைய பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

(i) தொக்கு
(ii) நிகர கைதேறத்தகு பெறுமதி
(iii) தொக்குகளின் கிரயம்
(iv) கொள்வனவுக் கிரயம்
(v) நிலை மாற்றக் கிரயம்
(vi) நிதிக் கூற்றுக்களில் தொக்குகள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியவை.

(ஆ) பெறுமானத்தேய்வுக் கணக்கீடு- இலங்கை கணக்கீட்டு நியமம் 8க்கு அமைய பின்வருவன வற்றிற்கு விடையளிக்குக.

(1) பெறுமானத்தேய்வு செய்யத்தக்க தொகை
(2) எஞ்சிய பெறுமதி

(இ) கலிப் நிறுவனம் ஓர் நிலையான சொத்தை ரூபா 33 000 கிரயத்தில் கொள்வனவு செய்தது. இதன் ஆயுள் 5 வருடங்களும், அதன் கழிவுப் பெறுமதி ரூபா 3 000 உம் ஆகும். மேலும் இதன் உற்பத்தி வெளியீடு ஒவ்வொரு வருடமும் முறையே 5 000, 4 000, 8 000, 7 000, ஆகும். கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| வருடம் | நேர்கோட்டு முறை | | உற்பத்தி அலகு முறை | | ஆண்டிலக்க கூட்டு முறை | |
|---|---|---|---|---|---|---|
| | பெறுமானத் தேய்வு | தேறிய மீதி | பெறுமானத் தேய்வு | தேறிய மீதி | பெறுமானத் தேய்வு | தேறிய மீதி |
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |

6. (அ) பரீட்சை மீதி தயாரிப்பதற்கான பிரதான நோக்கம் என்ன?

(01 புள்ளி)

(ஆ) பின்வரும் வழுக்களை விளக்கி உதாரணம் தருக.
(i) விடுபட்ட வழு
(ii) எதிர்மாறு வழு
(iii) செய்யப்பட்ட வழு

(03 புள்ளிகள்)

(இ) பின்வருவது வினோதினி நிறுவனத்தின் விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்குடன் தொடர்பாக 2001 ஆம் ஜின் மாத்திற்கு பெறப்பட்டது.

| | ரூபா |
|---|---|
| விற்பனை | 32 000 |
| பெற்ற காசு- வாடிக்கையாளர் | 26 334 |
| உட்திரும்பல் | 480 |
| பதிவழித்த அறவிடமுடியாக்கடன் | 1 460 |
| கொடுத்த கழிவு | 960 |
| வட்டி | 120 |
| மீதி 1ஜீன் 2001 | 14 670 |

இதன்படி பெறப்பட்ட மீதி 30 ஜுன் 2001 இல் உள்ள பட்டியல் மீதி ரூபா 16 598 உடன் இணங்கவில்லை.

காரணங்கள் வருமாறு.
(i) பட்டியல் மீதி எடுத்த போது ரூபா 900 வரவு மீதி தவறவிடப்பட்டது.
(ii) செலவுப்பக்கம் விற்பனைப் பேரேட்டில் உள்ள கணக்கு ஒன்று ரூபா 160 கூடுதலாக கூட்டப்பட்டது.
(iii) கழிவு ரூபா 70 விற்பனைப் பேரேட்டில் உள்ள போதும் காசுப் புத்தகத்தில் தவறவிடப்பட்டது.
(iv) கொள்வனவுப் பேரேட்டில் இருந்து விற்பனைப் பேரேட்டிற்கு மாற்றிய ரூபா 640 கட்டுப்பாட்டுக் கணக்கில் தவறவிடப்பட்டது.
(v) விற்பனை நாளேடு ரூபா 300 கூட்டி கூட்டப்பட்டது.
(vi) கொடுத்த கழிவு ரூபா 48 காசேட்டில் பதியப்பட்டபோதும் விற்பனைப் பேரேட்டில் வாடிக்கையாளன் கணக்கில் பதியப்படவில்லை.
(vii) விற்பனை நாளேட்டில் உள்ள ரூபா 138 வாடிக்கையாளன் கணக்கில் ரூபா 192 எனப் பதியப்பட்டது.

வேண்டப்படுவது:
(1) கட்டுப்பாட்டுக் கணக்கை தயாரித்த பின் திருத்தி பட்டியல் மீதி திருத்தக் கூற்றையும் தயாரிக்குக.
(2) திருத்திய பின் கட்டுப்பாட்டுக் கணக்கையும், பட்டியல் மீதி திருத்தக்கூற்றையும் தயாரிக்குக.

(ஈ) வரையறுத்த கேமா கம்பனியின் வங்கி நிரல் 2001 டிசம்பர் 31 ஆகிய திகதியில் ரூபா 450 000ஆன வரவு மீதியொன்றைக் காட்டியது. 2001 டிசம்பர் 31 வரை எழுதப்பட்ட மாதாந்த வங்கிக் கூற்று ரூபா 885 000 எனும் செலவு மீதியைக் காட்டியது.
காசேட்டை வங்கிக் கூற்றுடன் செவ்வை பார்த்த பொழுது பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் காசேட்டில் பதியப்படாது இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

(i) ரூபா 72 000 எனும் தொகைக்கான பங்கிலாபங்கள் வங்கிக்கு நேரடியாகச் செலுத்தப்பட்டிருந்தன.
(ii) ஒரு செலவு மாற்றலான (Credit Transter) கம்பனிக்குச் செய்த சுங்கத் தீர்வை மீளளிப்புத் தொகை ரூபா 78 000 வங்கியினால் சேகரிக்கப்பட்டது.
(iii) வங்கிக் கட்டணங்களின் தொகை ரூபா 9 000
(iv) கம்பனி செலுத்த வேண்டியிருந்த விளையாட்டுக்கழக அங்கத்துவப் பணமான ரூபா 21 000 எனும் தொகை கம்பனிக்காக வங்கியினால் செலுத்தப்பட்டது.
(v) வரையறுத்த கேமாக் கம்பனியின் கடன் மீள் கொடுப்பனவுக்கான நிலையான கட்டளை ரூபா 60 000 வங்கியினால் செலுத்தப்பட்டது.
(vi) வரையறுத்த கேமா கம்பனியின் வைப்புக் கணக்கு மீதியான 420 000 எனும் தொகை வங்கி நடைமுறைக்கணக்கிற்கு மாற்றப்பட்டது.

மேலும் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனை பின்வரும் விபரங்களை வெளிப்படுத்தியது.

(vii) சிம்மாயின் பெயருக்கு ரூபா 75 000 எனும் தொகைக்கு பேனாட்டின் பெயருக்கு 87 000 எனும் தொகைக்கும் வரையப்பட்ட இரு காசோலைகள் காசேட்டில் பதியப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
(viii) 2001 டிசம்பர் 31 ஆந் திகதியன்று காசாகவும், காசோலையாகவும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட தொகையான ரூபா 207 000, 2002 ஜனவரி 2ஆந் திகதி வரை வங்கியினால் செலவு வைக்கப்படவில்லை.

வேண்டப்படுவது:
(அ) ரூபா 450 000 ஆன வரவு மீதியுடன் ஆரம்பித்து காசேட்டின் வங்கி நிரலைத் தேதிவரை கொணர்ந்து பின்னர் வங்கிக் கணக்கினைச் சமப்படுத்துக.

(ஆ) 2001 டிசெம்பர் 31 இல் இருந்த படி வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஒன்றை தயாரிக்கவும்.





பாதுகாவலன் பத்திரிகையும், சமூக தொடர்பு ஆணைக்குழுவும் இணைந்து நடத்திய ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம் பயிற்சிப் பட்டறையில் சான்றிதழ்களை வழங்கிய அமலமரித் தியாகிகள் சபையின் வடமாகாண அதிபர் அருட்திரு ஜீவேந்திரா போல் மற்றும் பாதுகாவலன் ஆசிரியரும் - சான்றிதழைப் பெறும் அருட்சகோதரியையும் - சான்றிழ்களைப் பெற்றவர்களையும் படங்களில் காணலாம்.